தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஆவணி 12 (27-8-'60). சனிக்கிழமை | இதழ் 11

மாஸ்கோவில் செந்தமிழ்க் காவலர் சிதம்பரநாதனுர்

கீழ்த்திசை மாநாட்டுக்குச் சென்றிருந்த அறிஞர்கள் கானும் பி. பெரி (ஆப்பிரிக்கா),
. . 3 4 பிபிபி பாக் (பிரான்சு), தென்றி செட்சன் (ஜப்பான்), காரிபில்ம் (இங்கிலாந்து),
சுபேரி சாகேப் (அலிகார்), சிதம்பரநாதனுர் (தமிழ்நாடு).

குறள் விழாக் கவியரங்கம்

4. திருவள்ளுவர் ஒரு தத்துவ மேதை.

—பெரி. சிவனடியான்.

கண்ணதாசன் முன்னுரை.

சிவனடியான் தமிழென்றால் சீரி ருக்கும்
சித்திரித்த இலக்கியத்தின் சாறி ருக்கும்
அவனடியார் கேட்டாலும் காதல் பொங்கும்
அடுத்தபடி பக்தியிலே மனம்செல் லாது
தவமுடைய முனிவர்களை மயக்க வந்த
தனியழகி மேனகைபோல் நமை மயக்க
சிவனடியார் வந்துள்ளார் தத்து வத்தைச்
சிங்கார ரசத்தோடு தருவார் கேட்போம்!

திருவிழாக் கூட்டம்

முப்பத்து முன்றெனிலோ நம்ப மாட்டார்
முரிமின்னும் உடல்வனப்பைக் குறிக்க வில்லை.
எப்பக்கம் சென்றிடினும் 'கண்ண தாச!
எங்கிருந்து கற்றனந்தத் தத்து வத்தை,
ஒப்பரிய செல்வத்தை, ''தென்றல்'' 'முல்லை''
உயரிதழில் இவ்வயதில் தந்தாய்!'' என்றார்.
அப்பப்பா! அவ்வுரையைக் கேட்ட தாற்றான்
ஐயமதென் னகத்தினிலே எழுந்த தண்ணா!

தத்துவஞ்சேர் கவிஞனுன்றன் தலைமை யின்கீழ்
தத்துவத்தின் தந்தைதனைப் பாடச் சொன்னார்.
தத்துவத்தின் தத்தாகித் தவிக்கின் றேன்நான்
தவறிருப்பின் மன்னிப்பாய்! வணக்கம் ஐய!
இத்திருநாள் கொண்டாடும் இளைஞர் கூட்டம்
எங்கிருந்தித் தத்துவத்தைக் கற்றார். இந்நாள்
சித்தர்சிவன் விழாவினுக்கும் அடியார் கூட்டம்
சிறப்பாக இத்துணைபேர் இல்லை; வாழ்வீர்!

சிந்திக்கும் மனத்தில் எழும் மாசக்தி!

அடிமனத்தின் உள்ளுணர்வை வெளிக்கொ ணர்ந்தே
அறிவுவழி ஆக்குதலே தத்து வங்கள்
படிப்புயர்வால் தத்துவங்கள் வளர்வ தில்லை
பண்புளத்தால் தத்துவந்தான் எழுத லுண்டு.
மடியின்றிச் சிந்திக்கும் மனத்தி னுள்ளே
மறைந்துறையும் மாசக்தி தத்து வங்கள்.
நொடிப்பொழுதும் தனையெண்ணா நோன்பி னன்தான்
நுவல்கின்ற தத்துவத்தின் தந்தை யாவான்.

கடல்கடக்கும் கலம் திருக்குறள்.

உலகத்தார் வாழ்வுக்குப் பொருளு ரைத்த
உயரறிஞன் வள்ளுவனைத். தத்து வத்தின்
குலத்தந்தை எனக்கூறின் குற்ற முண்டோ!
குவலயத்தைக் குறளகத்தில் அடக்கித் தந்தான்
கலங்கொண்டு கடல்நீரைக் கடத்தல் ஆற்றும்
கவிக்குறளால் துயருலகைக் கடக்கக் கூடும்
நிலங்கண்ட இடமெல்லாம் வள்ளு வத்தின்
நெடிபரவும், தத்துவத்தின் நேர்மை யாலே.

பொய் மதத்தார் புறப்பட்டார்!

வேண்டுதல் வேண் டாமையிலான் இறைவன்,ஏற்றும்
விளக்கனைய வாலறிவன் இறைவன், அன்பு
பூண்டவனுய்ப் பொறிவாயில் ஐந்த வித்துப்
போற்றுதலில் உவமையிலான் இறைவன், இந்த
ஆண்டவனே அறவாழி அந்த ணன்என்
ருக்கியுள்ளார் வள்ளுவனார் இறைவ னுக
பூண்டறுக்க இக்கருத்தைப் புறப்பட் டார்கள்
பொய்மதத்தார் பலரிந்தத் தமிழர் நாட்டில்.

தெளிவில்லை; அதனால் விளக்கவில்லை!

சித்தாந்த தத்துவத்தைக் கூறி னார்கள்
சிறியேனால் அதைப்புரிய முடிய வில்லை
அத்தனையும் விளக்கிடநான் கேட்டேன்; அப்பா!
அப்பொருள்கள் இப்பொழுது புரிய மாட்டா
'முத்திநிலைப் பொருளெல்லாம் அறுப தில்தான்
முகிழ்க்கும்போ'' என்றார்கள், சித்தாந் தத்தைச்
செத்தாலும் நானறியப் போவ தில்லை
தெளிவில்லை அதனுள்ளே. தப்பிக் கின்றார்.

மனுநீதிக் கிடங்கொடோல்

மனுநீதி அறம்புகநாம் இடங்கொ டுத்து
வள்ளுவரின் தத்துவஞ்சொல் அறங்கெ டுத்தோம்.
''மனத்துக்கண் மாசிலா திருத்தல் ஒன்றே
மக்கள்கொள் அறமாகும் மற்ற தெல்லாம்
நினைத்தபடி செய்கின்ற ஆர வாரம்''
நிலையான தத்துவத்தை நெகிழச் சொன்னான்.
நினையளவும் இந்நாளில் செயலி லுண்டா?
செய்வதெல்லாம் விளம்பரத்தின் விலையே யாகும்.

கண்ணீரும் படையாகும்!

அன்பென்ற தத்துவத்தை விளக்க வெண்ணி
ஆர்வமுளார் கண்ணீரால் அறியச் சொன்னான்.
அன்புடையார் தமக்காக அழுதல் கண்டால்
அகிலத்தில் பிறந்தபயன் காணு கின்றோம்
தன்னுணர்வுக் களஞ்சியத்தில் எடுத்த செல்வம்
தாழில்லை அன்புடைமைக் கென்ற சொற்கள்
ஒன்றுரைக் கூறுங்கால், அழுத நீரை
உறுபடையாய்க் கொள்ளென்றான், உயர்ந்த ஞானி.

தங்கருமமே தவம்!

தவமுனிகள் கதைகேட்டுத் தளர்ந்த நாட்டில்
'தவம்செய்வார் தம்கருமம் செய்வார்' என்றான்
தவத்தருமைத் தத்துவத்தைத் தந்தும், இந்நாள்
தகுதியுள்ள தவமுனிவ ருண்டா? காவி
அவதாரம் இன்றுண்டு, காலை. மாலை
ஆற்றல்பெறத் தங்கபஸ்பம் உண்பா ருண்டு
துவண்டாலும் துன்பத்தால், பொறுத்துப் பொன்போல்
சுடர்காட்டத் தவஞ்செய்வார் இங்கே இல்லை.

ஆள்வினையால் ஊழ்வெல்க!

ஊழென்ற பெருவலிவை ஒப்பு கின்றான்
உடனடியாய் உள்ளத்தில் உரஞ்சேர்க் கின்றான்
சூழ்கின்ற இன்பத்தைத் துய்த்தல் போலத்
துன்பத்தைத் தாங்கிடவும் துணிக என்றான்
வாழ்வெல்லாம் ஊழாலே நடக்கு மென்று
வந்துதெருத் திண்ணையிலே குந்தி டாமல்
ஊழ்வெல்ல ஆள்வினையை உடைமை யாக்கி
உலகடைவாய்! என்றானே உலகின் மேதை.

காதல்பேசா வாயும் வாயோ?

ஆயிரத்து முந்நூற்று முப்ப துந்தான்
அறிவுதரும் முத்துக்கள் தத்து வங்கள்.
பாயிரந்தான் பாடியுள்ளேன், பகுத்துக் கூறப்
பத்துமணித் துளிகளிவை போதாதன்றே!
ஆயிரந்தான் சொன்னாலும், வள்ளு வன்தன்
அருங்காதற் றத்துவத்தைக் கூறு விட்டால்
வாயிருந்து பயனென்ன? தனிப்பா லாக
வழங்கியதன் உட்பொருள்தான் என்னே என்னே!

கைபிடித்தால் நாடி ஒழுங்காகும்!

காதல்தரும் தத்துவங்கள் கணக்கில் நில்லா
கண்டவற்றில் சிலசொல்வேன், அடடா! அன்புக்
காதல்புரி வார்க்கின்பம் கடலாம், காதற்
கடுந்துயரோ அக்கடலில் பெரிதாம், உண்மை.
காதலுமோர் இடத்தினிலே மேலாய்த் தோன்றும்
தையல்தரும் மையல்பெறத் தவிக்கும் போது
காதலெனும் நோய்க்கெங்கும் மருந்தே யில்லை.
கைபிடித்தால் சரி,நாடி ஒழுங்காய்ப் பேசும்.

கொஞ்சு! கெஞ்சு!

மறைப்பதற்கும் முடியாதாம் காதல், நாணம்
வழிவிடவும் மாட்டாதாம் புரியச் செய்ய
நிறைகுடக்கள் குடித்தால்தான் இன்பம், காதல்
நினைத்தாலே இன்பந்தான், கண்டால் துள்ளும்.
குறைசொல்லி ஊடுதலால், கூட லின்பம்
கொள்ளையெனக் கொஞ்சியவன் கெஞ்சச் சொன்னான்.
பறையறைந்தான் ஊடுதலில் தோற்றார் தானும்
பள்ளியறைப் போர்க்களத்தில் வென்றார் என்றே.

சோதித்தார்! தோற்றார்!

காதல்தேன் எண்ணத்தால் இனிக்கு மென்றால்
கருத்துத்தேன் இனித்திடுதே என்ன சொல்வேன்.
வாதித்து வாழ்க்கைநிலை கூறு தற்கு
வளமான தத்துவங்கள் குறளி லுண்டு.
சோதித்தார் பலருண்டு குறளைத் தூக்கிச்
சொல்லாலும் பொருளாலும் தோற்றே போனார்.
சாதிக்கக் குறளுண்டு தமிழு முண்டு
சாகாத தத்துவங்கள் வாழ்க! நன்றே.

பின்னுரை.

பொருள்ஏதோ இலக்கியந்தான் ஆனால் காதல்
பொட்டலத்தை மெதுவாகப் பிரித்தும் பார்த்தார்.
அறிவுடையார் என்றாலும் ஆசை யுள்ளார்
அழகுதமிழ்க் கவிதந்தார் வாழ்க அன்னார்!

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 7 | 27-8-'60 | இதழ் 11

தமிழ்த் தலைவர் சிதம்பரநாதன்

சிரிக்கும் இதழும் தமிழிற் சிரிக்கும்
சிந்தனை இதயம் தமிழ்சிந் திக்கும்
சுருக்கம் நுதலில் விழுந்தெழுங் காலை
தொடரும் வியர்வில் தமிழ்நதி பெருகும்
திறக்கும் கண்கள் தமிழாய்த் திறக்கும்
திகழும் புருவம் தமிழ்வில் தொடுக்கும்
பிறக்கும் மொழியில் தமிழ்ப்பூ மலரும்
பீடுறுந் தோற்றம் தமிழினைக் காக்கும்.

இட்டடி எல்லாம் இயற்றமி ழாக
எடுத்தடி யாவும் இசைத்தமிழ் பாட
எட்டடி வேங்கையின் எழிலார் தோற்றம்
என்றும் நாடகத் தீந்தமிழ் ஆய
பட்டதைக் கூறும் பாங்குடன் அன்பும்
படைத்தவன் எங்கள் சிதம்பர நாதன்
ஒட்டிய தமிழை உட்லொடுந் தூக்கி
உருசிய நாட்டினில் விரித்ததைக் கேட்டோம்.

"உலகில் நாங்கள் முத்தவர் மொழியில்,
உன்னதக் கலைகள் எம்மருந் திறமை
இலகுங் காவியம் பலபல கண்டோம்
ஈரே ழாயிரம் ஆண்டினும் மிகவே
துலங்கிய மொழியில் தோன்றிய தமிழர்
சொன்னவை கேட்டே பின்னவர் வாழ்ந்தார்
பலமொழி ஈன்ற பைந்தமி ழன்னை
பாரெ"னப் பலர்முன் படைத்தது கேட்டோம்.

பற்பல நாட்டின் பாவல ரிடையில்
பண்புடைச் சிதம்பர நாதனின் குரலே
அற்புத முரசாய் அமைந்ததை எண்ணி
அகத்திடை இன்ப மழையினைக் கண்டோம்
சொற்புல வோர்தம் தோள்விழு மலரை
தூயவன் காலில் சூட்டிட விழைவர்!
விற்பனன் தமிழின் பெருமையைக் காத்தான்
விழிவழி வாழ்த்தி வரவேற் கின்றோம்!

கண்ணதாசன்

பாலாய் பாங்கு.

பாங்கிலே பணம் போட்டால் பத்திரமாகஇருக்கும் என்பது மக்களிடையே உள்ள அசைக்க முடியாத நம்பிக்கை. இந்த நிலையான நம்பிக்கையை மக்கள் இழக்கும்படி செய்து விட்டது பாலாய் பாங்கு வீழ்ச்சி.

பாலாய் பாங்கின் வீழ்ச்சி திடீரென்று ஏற்பட்டதல்ல என்று தெரிய வருகிறது. பல ஆண்டுகளாகவே பாங்கின் கணக்கு நிலைமை சரிவர இல்லாமல் இருந்திருக்கிறது என்றும் தெரிய வருகிறது.

பாலாய் பாங்கின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணம், வெறும் வெண்ணைக் கடனாக (வெறும் நாணயப் பொறுப்பில்) கொடுத்த தொகை கோடிக்கணக்காக இருந்ததுதான். இந்த வெண்ணைக் கடன்களின் அளவு ஆண்டுக்காண்டு இலட்சக்கணக்கில் பெருகி வந்திருக்கிறது.

பாங்கின் சென்ற ஆண்டு ஐந்தொகைச் சீட்டில் (Balance Sheet) சந்தேகத்திற்கிடம் தரும் மோசமானகடன்கள் என்ற தலைப்பிலேயே ஏறக்குறைய பனிரெண்டு லட்சத்திற்கு மேலான தொகைக்குத் தனிக் கணக்குத் திறக்கப் பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையை, ரிசர்வ் பாங்கியும், நிதியமைச்சர் மொரார்ஜி தேசாயும் இதுவரை அறியாமல் இருந்தார்கள் என்று கூறுவதற்கில்லை. ஆண்டு தோறும் ரிசர்வ் பாங்கின் அதிகாரிகள் இந்தக் கணக்குகளைச் சோதித்துத்தான் வந்திருக்கிறார்கள். ஆகவே, காலா காலத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாததால், பாங்கியின் இந்தப் படுமோசமான வீழ்ச்சிக்கு ரிசர்வ் பாங்கியும், மொரார்ஜி தேசாயும்கூடக் காரணமாக இருக்கிறார்கள் என்று கூறுவதில் தவறில்லை.

இப்போது ரு 250/-வரை பணம் போட்டவர்களுக்கு முழுத் தொகையும் திருப்பிக் கொடுப்பதற்கேற்பச் சட்டத்தைத் திருத்த முயற்சியெடுப்பதாக மொரார்ஜி தேசாய் தெரிவித்திருக்கிறார். இது ஓரளவு ஏழை மக்களுக்கு உதவியாயிருக்கும். ஆனாலும், மொத்தத்தில் பொதுமக்களுக்கு இது பேரிழப்பேயாகும்.

அதிகமான வெண்ணைக் கடன் கொடுத்ததற்கு அரசியல் காரணங்கள் உண்டென்றும் வதந்தி யுலாவுகிறது. இது உண்மையானால், பாங்கின் மேல்மட்டுமின்றி அரசாங்கத்தின் மேலும் மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படத்தான் செய்யும்.

இரண்டு மூன்றாண்டுகளுக்கு முன்னாலேயே நிலைமை தெரிந்தும் பாங்கியைத் தொடர்ந்து தொழில் நடத்த அனுமதித்த நிதியமைச்சரும் ரிசர்வ் பாங்கும் பொதுமக்களை ஏமாற்ற உடந்தையாயிருந்தவர்கள் என்பதையும், பொதுமக்கள் சேமிப்பைக் கொள்ளைக்காரர்கள் கடன் என்ற பெயரால் சுரண்டிக்கொண்டு போய்விட்டார்கள் என்பதையும் கீழ்க்கண்ட படத்தில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.



சகுன சாஸ்திரியும் அறிவலி ஐயங்காரும்

உரிமைப் போராட்டம் தேசத் துரோகமாம்

சுதந்திராக் கட்சிச் செயலாளர் உளறல்!

அரசியல் மூளிகள்

அருப்புக்கோட்டை எம்.எஸ்.இராமசாமி

''வருகிற 31-8-60 தேதிக்குள்ஏகாதிபத்திய உத்தரவை - குடியாட்சித் தலைவரின் உத்தரவை-மாற்றி-மறு உத்தரவு வர வேண்டும், தவறினுல் இந்திய சர்க்காரை எதிர்த்து தி. மு. க. அறப்போர் தொடங்கும்''

இதுதான், இந்திய சர்க்காருக்கு தி. மு. க கொடுத்த எச்சரிக்கை-அறைகூவல்!

இப்படி, அறை கூவல் விடுத்து, அதன் பிறகும் 'பதில் இல்லை-பயன் இல்லை' என்று தெரிந்தால், அறப்போர் புரிய வேண்டியதுதான் என்று, குமார பாளையம் பொதுக்குழு முடிவெடுத்தது.

அப்படி முடிவெடுத்ததுடன் பொதுக் குழு அமைந்துவிடவில்லை. தனது, அறைகூவல் அலட்சியம் செய்யப்பட்டால், உடனே போர்க்களம் செல்ல, ஆயத்தமாக, ஆரம்ப வேலைகள் அனைத்தையும் செய்யுமாறு, ஆணை பிறப்பித்தது பொதுக்குழு. ஏனெனில் மீண்டும் கூடி ஆலோசிக்க வேண்டிய அவசியம் இராது அல்லவா?

குரங்கு பல்லை யிளித்ததாம்!

படை வீரர்கள் பட்டியல்-படைத் தலைவர்கள் நியமனம்-பாசறைகள்-போர் முறைகள்-எல்லாம் வகுக்கப்பட்டன.

போராட்ட நிதி திரட்டப்பட்டது-திரட்டப்படுகிறது. மறக்குல மைந்தர்கள்-அறப்போர் வீரர்கள், அவரவர் மனைவி மக்களிடம் போர்க்களம் செல்ல விடை பெற்றுக்கொண்டிருந்தனர்-இருக்கின்றனர்!

தமிழுக்கு உயிர் கொடுத்த தாளமுத்து! நாட்டுக்கு உயிர் கொடுத்த நடராசா! வாழ்க உமது புகழ்! வளர்க தமிழ்! வென்றல் திராவிட நாடு! இன்றேல் சுடுகாடு! என்ற வாழ்த்துக்கள், சூளுரைகள் எங்கும்ஆர்த்துக்கிளம்பின!

இந்த நேரத்தில்தான் வடவர் பிரான் பிரசாத் தமிழகத்தில் ''திருவோலக்கம் கொள்வார்-திருவுலா வருவார்'' என்ற சேதியும் வந்தது!

''குரங்கு-கடித்துத் குதறியதோடல்லாமல் பல்லை இளித்துக்கொண்டு ஏளனமும் செய்ததாம்'' என்பதுபோல் இருந்தது அந்தச் சேதி!

சும்மா இருந்தால் சுதந்திரம் போய்விடும்.

'1965 முதல் ஆதிக்க மொழி இந்திதான்'' என்று ஆணையும் அனுப்பி விட்டு, அந்த ஆணை என்ன வேலை செய்திருக்கிறதென்று 'ஆழம்' பார்க்க வருவதுபோல் தோன்றியது வடவர் பிரான் வருகை!''

''அவர் வந்தால் என்ன?'' என்று வாளா இருந்தால், வடவரும், அவர்கள் வாழ்வின் அச்சாணியான அந்தத் தலைவரும், ஏனைய வெளியாரும் என்ன நினைப்பர்?

''இந்திபற்றிய ஆணையைத் திராவிடம் ஏற்றுக்கொண்டது'' என்று கருத இடம் ஏற்படுமே! என்று, தி. மு. க ஆலோசித்தது.

அந்த ஆலோசனையின் விளைவுதான், வடவர் பிரான் பிரசாத்தைக் கருங் கொடியால் வரவேற்பது, என்ற முடிவு.

அதுவரை அறை கூவலுக்கும் எச்சரிக்கைகளுக்கும் அசையாமலிருந்த வடவாதிக்க உன்மத்தம் 'கருங் கொடி' என்ற உடனே, ஐயோ வேண்டாம்-வேண்டாம்! நேரு பண்டிதரின் பாராளுமன்ற வாக்குறுதி காப்பாற்றப்படும்! அரசியல் சட்டத்தையே திருத்துவோம்! என்றெல்லாம் வட திசையிலிருந்து அலறும் ஒலிகள் கேட்டன.

அந்த அலறல் சத்தம் கேட்ட உடனே 'இத்தனை கூச்சலுக்குப் பிறகும் கருங்கொடியைத் தூக்கிக் கொண்டு போய் 'அபவாதம்' கட்டிக் கொள்வானேன்!'' என்ற கருத்துடன் தி. மு. க கருங்கொடியைச் சுருட்டி வைத்தது,

'ஐயையோ, ஐயையோ, எங்கள் ஆணையை-இந்தி ஆதிக்கத்தை-நீங்கள் ஏற்றுக்கொண்டதாக நாங்கள் நினைக்கவில்லை-நினைக்கப் போவதுமில்லை. அவமானம் செய்யாதீர்கள்- அறிவுடன் நடந்துகொள்கிறோம்''

என்று, அலறினர்கள் அவர்கள்!

இந்த நிகழ்ச்சிகளுக்கிடையில் இருக்கும் 'தத்துவம்' என்ன? கருங்கொடி ஏந்திலை் எவ்வளவு இலாபமோ, அதைவிட அதிகமான இலாபம் கருங் கொடியைத் தொடாமலே கிடைத்திருக்கிறதல்லவா?

தி. மு. க, ''கருங்கொடி ஏந்துவேன்!'' என்ற பிறகு, அதன் எதிர் ஒலி, தென் துருவத்திலிருந்து வட துருவம்வரை எட்டிவிட்டது! பம்பாய் ''டைம்ஸ் ஆப் இந்தியா'' சொல்வது போல தி. மு. க அதனுடைய இந்தி எதிர்ப்புப் போருக்குப் புதிய ஆதரவாளர்களையும் பெற்றிருக்கிறது. இன்னும் என்ன வேண்டும்?

யார் முட்டாள்!

சிலர் கேட்கிறார்கள், இந்தி ஒழிந்து விட்டதா? அலகுக் கற்களிலும், புதிய காசுகளிலும் இந்தி ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கவில்லையா? அப்படி இருக்கும்போது கருங் கொடியை ஏன் சுருட்டி வைக்க வேண்டும்? என்று.

இப்படிக் கேட்பவர்கள், எல்லாரையும் முட்டாள் என்று கருதிக்கொண்டு இருக்கிறார்களா, அல்லது, தாங்களே முழு மூடர்களாக இருந்துகொண்டு, அதனை, விளம்பரமும் செய்துகொண்டிருக்கிறார்களா என்று ஆராய வேண்டியதாக இருக்கிறது.

ஏனென்றால், கருங்கொடி ஏந்த வேண்டும் என்கிற தி. மு க தீர்மானம் இந்தி எதிர்ப்புப் போரின் சார்புடையதே அன்றி அதுவே இந்தி எதிர்ப்புப் போர் அல்ல. இது உலகறிந்த ஒன்று.

எந்த நோக்கத்துடன் தி. மு. க கருங்கொடி தூக்க எண்ணியதோ, அந்த நோக்கம் எதிர்பார்த்ததைவிடப் பல மடங்கு வெற்றி பெற்றிருக்கிறது. பிறகு ஏன் கருப்புக்கொடி?

அண்ணா ஏமாறுவார்?

இதனுல், வடவர்கள் வளைந்துவிட்டார்கள் என்றே, வாய்மொழி தவற மாட்டார்கள் என்றே தி. மு. க கருதிக் கொண்டிருக்கவில்லை. யார் ஏமாந்தாலும், அறிஞர் அண்ணா ஏமாறுவார்?

பின், ஏன் கருங்கொடி சுருட்டப்பட வேண்டும்? என்றால்,-

''வடவர்களின் மாபெரும் தலைவரே! உமது இந்தி ஆதிக்க ஆணையைத் திராவிடம் ஏற்கவில்லை-ஏற்கப் போவதில்லை. அதற்கு அடையாளம்தான் இந்தக் கருங்கொடி!'' என்று, அறிவிக்கவே கருங்கொடி ஏந்த நினைத்தது தி. மு. க!

''தி. மு. கவுக்கு இத்தனை பெருமை ஏற்படுவதா? அப்படி ஏற்படவிடலாமா?''

இது, சில அரசியல் 'மூளி'களின் எண்ணம். இந்த மூளிகளின் முழு முதல் தலைவர், திரு. ம. பொ. சி.

முழு மூளி பேசியது!

இந்த முழு மூளி சொல்கிறார்;— தந்தியாதித்தன் வகையறு கருப்புக் கொடி காட்டுவதை நான் ஆதரிக்கவில்லை. ஆனல், இந்தியை எதிர்க்க தி. மு. க. ஒன்றுதான் என்று பேரெடுப்பது எனக்கு அடிவயிற்றைக் குடைகிறது. அதனுல்; தி. மு. க ஒன்றுதான், என்கிற நிலையைப் போக்கும் அளவுக்கு, தந்தியாதித்தன் செயலை ஆதரிக்கிறேன்.

என்ற கருத்துப்பட ஏதேதோ-உளறி இருக்கிறார்.

இந்த உளறலைப் பார்த்தபிறகு நமக்கொரு கதை நினைவுக்கு வருகிறது —

தருதலைப்பட்டி விரிதலை வீதியில், சகுன சாஸ்திரி என்று, ஒரு பார்ப்பான் இருந்தானும். அவனுக்குப் பக்கத்து வீட்டில் அறிவிலி ஐயங்கார் என்று இன்னொருவன் இருந்தானும். இருவருக்கும் பகை உண்டாயிற்றும். ''பகைவனுக்கு ஏதாவது தொல்லை தர வேண்டுமே'' என்று, விடிய விடிய ஆலோசனை செய்தானும்-ஐயங்கார். மூக்கும் காதும் அறுபட்டுப் போனவர்களை எதிரில் கண்டால் 'சகுனம்' சரியில்லை என்று திரும்புவது வழக்கமாம் சாஸ்திரிக்கு!

இந்த சகுன வழக்கம் ஐயங்காரின் ஆலோசனையில் தோன்றியதாம். உடனே, ''இப்படித்தான் இவனுக்குத் தொல்லை கொடுக்க வேண்டும்'' என்று, கத்தியைத் தீட்டித் தனக்கும், தனது மனைவிக்கும் உள்ள மூக்கு, காதுகளை அறுத்துக் கொண்டு மறு நாள் முதல், சகுன சாஸ்திரி வீட்டிலிருந்து புறப்படும் போதெல்லாம், கணவன் மனைவி இருவரில் ஒருவர் எதிரில் போய் நிற்க ஆரம்பித்தார்களாம்!

அந்த அறிவிலி ஐயங்காரின் அபார யோசனை போலவே, ம. பொ சி யின் செயல் இருக்கிறது. தந்தி யாதித்தன் கருங் கொடி பிடிப்பதால் தி. மு. கவுக்கு என்ன கேடு வந்து விடும்?

இமயத்தின் உறவு எப்படிக் கிடைக்கும்?

தி. மு. க வின் கொள்கை சரியில்லை என்றல் அதனை விளக்க வேண்டியது கடமை. அதை விடுத்து. தமிழர்களுக்காகவே உழைப்பதாகச் சொல்லும் தந்தி யாதித்தனும். ம. பொ. சியும் சேர்ந்து தமிழ் நாட்டுக்கும் இந்தியில்லாத பிறநாடுகளுக்கும் பொதுவான ஒன்றை-இந்தியைத் திணிக்க மாட்டோம்-என்கிற உறுதி மொழியை-அதிகார பூர்வமாய்ப் பெற்றது தி.மு.க.

அதை எதிர்ப்பதாக எண்ணிக்கொண்டு, தந்தி யாதித்தன் 'கறுப்புக்கொடி பிடிப்பேன்' என்பதும். 'அப்படிச்செய் தி. மு. க வுக்கு எதிர்ப்பு என்கிற அளவுக்கு நான் ஆதரிக்கிறேன்' என்று, ம. பொ. சி. சொல்வதும் என்ன அருத்தம்?

வடவர்களின் உறவும், தமிழகத்தின் உரிமையும் வேண்டும் என்பவர் ம. பொ. சி. பஞ்சையும் நெருப்பையும் ஒரே பாத்திரத்தில் வைக்க வேண்டும் என்பது போல! இந்த ம. பொ. சி யை வடவர்கள் மதிப்பார்களா? ''இவனுடைய தி. மு. க வெறுப்பைக் காட்டுவதற்காக நமக்குக் கருப்புக் கொடி காட்டத் தூண்டுகிறனே, அற்பன்!'' என்று, வடவர்கள் கருத மாட்டார்களா?

தமிழர்கள் என்ன நினைப்பார்கள்? ''இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து, தானும் ஒன்றும் செய்யவில்லை. செய்பவர்களையும் ஆதரிக்கவில்லை. தி. மு. க வெறுப்பைக் காட்ட இது தான சமயம்? சே சே என்ன மனிதன்!'' என்று கருத மாட்டார்களா?

பொருமை என்னும் மூளை நோய்.

இவைகளை எல்லாம் ம. பொ. சி கருதவில்லை. ''தனக்கு மூக்கும் காதும் போனல் சரி! எதிரிக்கு சகுனத் தடையாய் இருந்தால், அதுவே போதும்!'' என்ற அறிவிலி ஐயங்கார் முடிவிலேயே உளறிவிட்டார். 'பொருமை' என்னும் மூளை நோய் மனிதனை எவ்வளவு இழிந்தவனக ஆக்கி விடுகிறது.

இவர்கள், இப்படி இருக்க தனி மனித சுதந்திரத்திற்காகப் பாடுபடத் தோன்றிய சுதந்திராக் கட்சியின் தமிழ் நாட்டுச் செயலாளர் கருங்கொடி வரவேற்பை எதிர்த்து அறிக்கை ஒன்று விடுத்தார். அதில்;—

''குடியாட்சித் தலைவருக்கு கறுப்புக் கொடி பிடிப்பது தேசத் துரோகம்''

என்று முழக்கி இருக்கிறார்! பாவம்! அவருக்கு தேசத் துரோகம் என்றல் 'என்ன அருத்தம் என்றே தெரியாது என்று கருதும்படி இருக்கிறது.

ஒரு நாட்டு மக்களின் நலத்தை-உரிமையை-வேற்று நாட்டாருக்குக்காட்டிக் கொடுப்பதைத்தான் தேசத் துரோகம் என்று சொல்ல நாம் கேட்டிருக்கிறோம்.

எல்லைக்கோடு இதுதான்!
திட்டமில்லை திட்டு உண்டு.

ஒரு நாட்டு மக்கள் தங்களுடைய உரிமைக்காகப் போராடுவதை-உரிமையைப் பறித்தவர்களைப் புறக்கணிப்பதை-உரிமையைப் பறித்தவர்கள் மீது

—10-ம் பக்கம் பார்க்க—

உலகில் தமிழார்வம் பெருகி வருகிறது

மாஸ்கோ சென்று வந்த பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதனர் அறிவிப்பு

குருடன் கை அழகோவியம் நம் தமிழ் அதை உலகுக்குத் தரவேண்டும்

—கா. அப்பாத்துரையார்.

மாஸ்கோவில் நடந்த கீழ்த்திசை ஆராய்ச்சித்துறை அறிஞர் மாநாட்டுக்கு, இந்தியத் துணைக்கண்டத்துப் பிரதிநிதிகளில் ஒருவராகத் தமிழ்மொழி குறித்துப்பேசச் சென்ற டாக்டர் அ சிதம்பரநாதனர் அவர்கள் சென்ற 20-8-60 அன்று திருப்பி வந்து சேர்ந்தார்கள். "உலகிற்குத் திருக்குறள் வழங்கும் செய்தி" பற்றிப் பேசித் திரும்பி வந்த டாக்டர் சிதம்பரநாதனருக்கு ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தின் சார்பில், சென்னை எஸ்பிளனேடு ஒய். எம். சி. ஏ. கட்டடத்தில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது.

மா. இளஞ்செழியன்

தோழர் மா இளஞ்செழியன் சிதம்பரனரின் சிறப்பியல்புகளைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசி, சட்டசபைத் தலைவர் டாக்டர் யூ. கிருஷ்ணுராவ் அவர்களைத் தலைமை தாங்கி நடத்தித் தரும்படி கேட்டுக்கொண்டார்.

டாக்டர் யூ. கிருஷ்ணு ராவ்

தலைமை தாங்கி நடத்திய டாக்டர் யூ. கிருஷ்ணுராவ் அவர்கள், தமிழில் வல்ல அறிஞர்கள் கலந்துகொள்ளும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளத் தனக்குத் தகுதியில்லை எனினும், டாக்டர் சிதம்பரநாதனரைப் பாராட்ட வேண்டும் என்பதற்காகவே கலந்துகொண்டதாகத் தெரிவித்தார்கள்.

உயர் திரு. அலெக்சாண்டர்

முதல் பேச்சாளராகிய ஒய் எம், சி. ஏ. தலைவர் அலெக்சாண்டர். அவர்கள் ஆங்கில மொழியில் அழகுற ஒரு பாராட்டுரை வழங்கினர்கள்!

டாக்டர் மா. இராசமாணிக்கனர்

பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனர்அவர்கள் பேசும்போது, தமக்கும் சிதம்பரநாதனருக்கும் 33 ஆண்டுப் பழக்கமும் நட்பும் உண்டென்று கூறி, அவருடைய சிறப்பியல்புகளை நகைச்சுவையாகப் பேசி எல்லோரையும் சிரிக்கச் செய்தார்கள். டாக்டர் சிதம்பரநாதனர் எந்தச் செயலையும் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட முறைப்படி செய்யும் பழக்கமுடையவர் என்றும், இளைஞர்கள் அவர்கள் வழியைப் பின்பற்ற வேண்டுமென்றும் இராசமாணிக்கனர் குறிப்பிட்டார்.

பேராசிரியர் க. அன்பழகன்

அடுத்துப் பேசிய பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், டாக்டர் அ. சிதம்பரநாதனர் அவர்கள் திராவிட நாட்டின் ஒரே பிரதிநிதியாகக் கலந்துகொண்டு, திராவிட மொழிகளின் தாய்மொழியாகிய தமிழின் பெருமையை உயர்த்தியிருக்கிறர்கள் என்று குறிப்பிட்டார்கள். மேலும் அவர்கள் பேசியதாவது:—

டாக்டர் கால்டுவெல், ஜி. யூ. போப், பெஸ்கி முதலிய பிறநாட்டுப் பேரறிஞர்கள் தமிழ்நாட்டில் வந்திருந்து தமிழைக் கற்று, தமிழ் நூல்களை வெளியுலகிற்குப் பரப்பினர்கள். ஆனல் இன்று சிதம்பரநாதனர், பிறநாட்டிற்கே சென்று, பல மொழிப் பேரறிஞர்களிடையே தமிழின் பெருமை பற்றிப் பேசித் திரும்பியிருக்கிறர்கள். அவர்கள், தமிழர்களின் பிரதிநிதியாகச் செல்லத்தக்க முழுத் தகுதியும் உடையவர்கள், அவர்களைத் தமிழ்நாட்டின் கலாசாரத் தூதுவராக வெளிநாடுகளிலேயே சுற்றிவரும்படி செய்ய வேண்டுமென்று அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களிடமே கூறியிருக்கிறேன். சிதம்பரநாதனர் உண்மையிலேயே ஒரு செந்தமிழ்க் காவலர். காவிரியும் அதன் நீரும் உள்ளளவும், பொதிகையும் அதன் தென்றலும் உள்ளளவும், தமிழும் அதன் இனிமையும் உள்ளளவும் அவர்கள் வாழ்க என வாழ்த்தி வணங்குகிறேன்.

நாரண துரைக்கண்ணன்

அடுத்து இரண்டாவது தலைவராக வந்த உயர்திரு நாரண துரைக்கண்ணன் அவர்கள் பேசும்போது, டாக்டர் சிதம்பரநாதனர், பல சிறந்த சிறு கதைகளையும் கட்டுரைகளையும் எழுதியிருக்கிருர் என்று குறிப்பிட்டார்.

முதலில் பேசிய இராசமாணிக்கனர் சிதம்பரநாதனருக்குக் கோபமே வராது, எப்போதும் நகை முகத்துடனேயே இருப்பார் என்று குறிப்பிட்டார்கள். ஆனல், தமிழ் எழுத்தாளர் சங்கத்திலே ஒரு பெரியவர் தமிழைப் பழித்துக் கேள்வி கேட்டபோது பார்த்தால், கோபத்தின் சொரூபமே அப்படியே அவருடைய முகத்தில் பொருந்தியிருந்தது. தமிழைப் பிறர் பழித்தால், தீமையைக் கண்டால், எப்போதும் இன்முகமுடைய சிதம்பரநாதனர் அடைகின்ற கோபம் அளவு கடந்ததாகிவிடும் என்றும் குறிப்பிட்டார்.

மயிலை. சிவமுத்து

பேராசிரியர் மயிலை சிவமுத்து உணர்ச்சி தோன்றும்படியாகப் பேசினர். ரஷ்யாவுக்கும் பிறநாடுகளுக்கும் எத்தனையோ பேர், நடனமணிகளும், நகைச் சுவையரசர்களும் அரசியல் வாதிகளும் போய் வந்திருக்கிறர்கள். ஆனல், சிதம்பரநாதனர் தான் தமிழ் விதையைத் தூவிவிட்டு வந்திருக்கிருர் என்று கூறினர்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார்

டாக்டர் சிதம்பரநாதனரைக் கடைசியாகப் பாராட்டிப் பேசிய பன்மொழிப் புலவர் அறிஞர் கா. அப்பாத்துரையார் அவர்கள், ரஷ்ய நாட்டில் மாஸ்கோவில் நடந்த கீழ்த்திசை யறிஞர் மாநாட்டைப் பற்றித் தெள்ளத் தெளிவான விளக்கம் கொடுத்தார்கள்.

கீழ்த்திசைதான் உலக நாகரிகத்தின் பிறப்பிடம் என்று கருதியதால் தான் இந்த மாநாட்டிற்கு இப்பெயர் வைத்திருக்கிருர்கள் என்றும், கீழ்த்திசை மொழிகள், இனங்கள்பற்றி ஆராய்கிற மாநாடு இதுவென்றும், இதில் எல்லா நாட்டு அறிஞர்களுமே கலந்துகொள்கிருர்கள் என்றும் அறிஞர் அப்பா குறிப்பிட்டார். அப்பா மேலும் பேசுகையில், இந்த மாநாட்டுக்கு 64, 65, நாட்டுப் பிரதிநிதிகள் வருகிருர்கள் என்றும், இது ரஷ்ய நாட்டாரின் மாநாடு அன்று ஓருலக மாநாடு எனவும், ஒவ்வொரு முறையும் உலகின் வெவ்வேறு நாடுகளில் இது கூடுவது வழக்கம் என்றுர், அடுத்த மாநாடு 1963-ல் இந்திய நாட்டில் ஒரு பெரிய நகரில் நடத்துவதென்று முடிவெடுத்திருக்கிறாகள் என்றும் குறிப்பிட்டார்

அப்பா மேலும் கூறுகையில், இந்த மாநாடு 25-வது மாநாடு என்றும், இதற்குமுன் நடந்த மாநாடுகளில் இந்திய நாட்டிற்கு என ஓரிடம் தான் கிடைத்தது என்றும், இப்போது இரண்டிடம் கிடைத்திருக்கிறதென்று சொல்லி, இனி இந்தியா நான்கு இடங்களைப் பிடிக்க வேண்டும் என்றும் கூறினர்கள்.

உலக நாடுகளில் முன்னுளில் வட மொழிக்கிருந்த செல்வாக்கு இப்போது தமிழுக்கு ஏற்பட ஆரம்பித்திருக்கிறது என்றுர் அப்பா.

தமிழ் நூல்கள் உலகத்துக்குரியன என்றும், அவை உலகத்தினர் எல்லோர்க்கும் பயன்படத்தக்க சிறப்புடையன என்றும், இப்போது, தமிழ் நூல்கள் குருடன் கையில் உள்ள அழகோவியம் போலவும், செவிடன் வீட்டு அறையில் பூட்டி வைக்கப்பட்டிருக்கும் யாழ்போலவும், சுவை யறியாதவனிடம் அகப்பட்ட அமிழ்தம் போலவும் நம்மிடம் இருந்தும் பயனில்லாமல் இருக்கின்றன. அவற்றை உலகிற்கு வழங்கிப் பயன்படுத்த வேண்டும் என்று அறிஞர் அப்பா கூறினர். கடைசியாக அப்பா, நாம் இந்தப் பாராட்டைச் சிதம்பரநாதனருக்கு வழங்கவில்லை, அவரைப் பாராட்டுவதன் மூலம் தமிழர்களாகிய நாம் நம்மையே பாராட்டிக்கொள்கிருேம் என்று சொன்னர்கள்.

டாக்டர் அ சிதம்பரநாதனர்

டாக்டர் அ சிதம்பரநாதனர் பாராட்டுரைகளுக்குப் பதிலளிக்கும் முறையில் பேசியதன் சுருக்கம்.

பாராட்டுரைகள் என்னைத் தலைதாழும்படி செய்துவிட்டன ஆகையால பேசத் தயக்கமாயிருக்கிறது.

நாவலர் சோமசுந்தர பாரதியார் பண்டிதமணி, ந. மு. வே ஐயா ஆகியோரின் நன் மாணுக்கனுக இருக்கும் பேறு பெற்றவன் யான்.

மாஸ்கோவிற்குப் புறப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் எனக்குத் திடீர் என்று கிடைத்தது. அதனுல் தான் நண்பர்களிடம் எல்லாம்-நான் சொல்லிக்கொண்டு போகவில்லை. நான் மாஸ்கோ சென்றேன்: வென்றேன் என்று குறிப்பிட்டார்கள். அப்படியல்ல, சென்றேன்; சொன்னேன்; திரும்பினேன். அவ்வளவு தான். இப்போது நான் எதைச் சொல்வதென்று தெரியாமல் தயங்குகிறேன். போகும்போது ரஷ்ய விமானத்தில் (ஏரோபிளாட்) சென்றேன். அது இமயமலைக்கு மேல் 50,000 அடி உயரத்தில் பறந்து செல்கிறது. விமானத்திலிருந்து பனிமலை யுச்சியைப் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. டில்லியிலிருந்து மாஸ்கோ போய்ச் சேர ஒன்பது மணி நேரமாகிறது. திரும்பும்போது வந்த இந்திய விமானம் இமயத்தைச் சுற்றிக்கொண்டு வருவதால் $11\frac{1}{2}$ மணி நேரம் பிடிக்கிறது.

ரஷ்யாவில் கல்லூரி மாணவ மாணவிகள் ஓய்வு நேரத்தில் உழைத்து ஊதியம் பெறுகிருர்கள். பெரும்பாலான வேலைகளில் பெண்களே ஈடுபட்டிருக்கிருர்கள். பஸ், லாரி, டிரக் ஓட்டுபவர்களாகவும் பெண்கள் இருக்கிருர்கள். ஓட்டல்களில் பணியாளர்களாகவும் வங்கிகளில் கணக்கர் வேலையிலிருந்து மிக உயர்ந்த (ஏஜண்டு) வேலைவரை பெண்களே பெருவாரியாக இருக்கிருர்கள். அங்குப் பெண்கள் [illegible] அதிகம். ரஷ்யர்கள் எந்த வேலையையும் மிக விரைவாக முடிக்கிருர்கள். மிக எளிய வேலைக்காரரும் மிகப் பெரிய அதிகாரியுடன் சரளமாகத் தொடர்பு கொண்டு வேலைகளை விரைந்து முடிக்கிருர்கள். செம்மைச் சதுக்கம், செங்கொடி ஆகியவையுள்ள இடத்திலே சிவப்பு நாடா முறை கிடையாது.

ரஷ்யர்கள் அழிக்கின்ற மனப்பான்மையுடையவர்கள் என்று கருதப்படுவது தவறு. அவர்கள் பழைய கோயில்களை யழிக்கவில்லை. அவற்றில் நூற்றுக்குத் தொண்ணூறு கோயில்களை கண்காட்சி சாலைகளாக மாற்றியிருக்கிருர்கள். மதங்களையும் அவர்கள் இன்னும் விட்டுவைத்து இருக்கிருர்கள். மறைந்துபோன தலைவர்கள், அறிஞர்கள் அரசர்களுடைய பொருள்களை இன்னும் போற்றிப் பாதுகாத்து வருகிருர்கள்.

நம் நாட்டில் மாதம் முப்பது ரூபாய் வாங்கக்கூடிய தொழிலாளி செய்யும் வேலைக்கு அங்கு 140 ரூபாய் (300 ரூபிள்) சம்பளம் கிடைக்கிறது. பெரும்பாலும் மிக உயர்ந்த சம்பளம் 1000, 1500 ரூபிள்தான். ஆனல், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் ஆகிய மேதைகளுக்கு மட்டும் 3000, 4000 ரூபிள்கள் சம்பளம் கொடுக்கிருர்கள்.

மாநாட்டிற்கு வந்திருந்த ஒரு ஜெர்மானிய அறிஞர் தமிழில் மிகவும் சரளமாகப் பேசி என்னைத் திகைக்க வைத்தார். அவர் தாயுமானவர் பாடல்களில் 400 பாடல்களை ஜெர்மனியில் மொழிபெயர்த்துள்ளாராம். அவர் பெயர் ஆர்னேலெக்மான் (Arnolegman) ரஷ்ய மாணவி ஒருத்தி ஷ்ரூனுலா என்ற பெயருடையவள் என்னுடன் தூய தமிழில் பேசினள். வந்தீங்க போனீங்க என்று பேசாமல், அங்குள்ள தமிழ் படித்தவர்கள் வந்தீர்கள், போனீர்கள் என்று இலக்கண மரபுப்படி தமிழ் பேசுகிருர்கள். நல்ல தமிழ் பேச நாம் அங்கு போய்க் கற்றுக்கொள்ள வேண்டும்போலிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள நம்மில் பல பேர் நல்ல தமிழில் பெயர் வைத்துக் கொள்ளத் தயங்குகிருேம். ஆனல், தமிழ் கற்ற ரஷ்யர் ரூடியன் (Rudeon) என்பவர் தமிழில் மிகுந்த பற்றுக்கொண்டு தம் பெயரைத் தமிழ்ப் பெயராக வைத்துக்கொண்டிருக்கிருர் Rudeon என்பது சிவப்பான என்ற பொருள்படும். அதற்காக அவர்தம் பெயரைச் செம்பியன் என்று மாற்றிவைத்திருக்கிருர்.

ரஷ்யர்களின் இசை நடனம் பார்க்கத்தக்கது. ஒற்றைப் பெருவிரலில் நின்றுகொண்டு உடலை வளைத்துச் சுழற்றி ஆடும் பெண்களின் காட்சி அழகுக்காட்சி. அவர்கள் அருமையாக மெய்ப்பாடுகளை வெளியிடுகிருர்கள்.

மாநாட்டில், ஒரு மொழியில் பேசுவதை உடனுக்குடனே, வேறு நான்கு மொழிகளில் மொழிபெயர்த்துக் கொடுக்கிருாகள். இது விஞ்ஞானத்தினுல் ஏற்பட்ட பெரிய வசதி. மாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் தமிழைப்பற்றி அறிந்துகொள்ள ஆவலுடையவர்களாக இருந்தார்கள். தமிழ் நூல்கள் வரலாற்று முடிவுகள்பற்றிப் பல கேள்விகள் கேட்டார்கள். உலகின் பல்வேறு பகுதிகளிலும் தமிழைப்பற்றி அறிய வேண்டுமென்ற ஆவலும் ஆர்வமும் வளர்ந்து வருகிறது என்பதை அறிந்துகொள்ள இந்த மாநாடு ஒரு வாய்ப்பாயிருந்தது.

(குறிப்பெடுத்து உதவியவர்: கே. பக்தவத்சலம்.)

18. ஜமீந்தார் மாளிகை

அண்ணுமலைப் பண்டிதர் முகத்தை உம்மென்று வைத்துக்கொண்டிருந்தார். அவருடைய கோபத்திற்குப் பயந்தே தங்கம், தனக்கு விருப்பமில்லாவிட்டாலும், மாடுகளின் கயிற்றைத் தளர்த்திப் பிடித்து அவற்றின் முதுகில் தார்க்கம்பினல் தட்டி ஹே! ஹே! என்று சத்தமிட்டு ஓட்டிக்கொண்டு போனுள். மாடுகள் கொஞ்சம் அயர்ந்து நடக்க ஆரம்பித்தாலும் உள்ளேயிருந்தபடியே அண்ணுமலைப் பண்டிதர், "தங்கம், தட்டி ஓட்டு! தட்டி ஓட்டு!" என்று தூண்டிக்கொண்டிருந்தார். வீதியில் இந்த விந்தைக் காட்சியைக் கண்ட மக்களெல்லாம் அதிசயந் தோன்றும் முகபாவத்தோடு திரும்பிப் பார்த்துத் தியங்கி மயங்கி நின்ருர்கள்! "ஆ! ஒரு பொம்பிளை வண்டி ஓட்டுரு!" என்று தங்கள் ஆச்சரியத்தை வாய்விட்டு வெளிப்படுத்திஞர்கள் சில பெண்கள்

தாவாடையில் கைவைத்துத் தங்கள் வியப்புணர்ச்சியில் அது தரையில் விழுந்துவிடாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள் சில பெண்கள்.

'காலம் கலிகாலமோன்னே! கன்னிப் பெண்கள் கூட இப்படித்துணிஞ்சிட்டாங்கோ!' என்று காலத்தைப் பழித்துப் பேசினுர்கள் சில வைதிகர்கள்! இப்படியாக ஊரெல்லாம் பார்த்துச் சிரிக்க, உள்ளத்திலே வேதனை பொங்க, அந்த அண்ணுமலைப் பண்டிதர் ஒருவருடைய மனம் மட்டும் கோபத்தால் குமுருமல் இருந்தால் போதும் என்ற எண்ணத்தோடு தங்கம் மாடுகளைத் தட்டி ஓட்டினுள்.

நெய்யூரிலிருந்து கதலிப் பட்டணம் வரும் வரையிலே, வழி முழுவதும், அந்த வண்டியைப் பார்த்தவர்கள் தங்கள் ஆச்சரியத்தையும் அங்கலாய்ப்பையும் காட்டிக் கொள்ளத் தவறவில்லை. அவ்வப்போது சின்னஞ்சிறுவர்கள் வண்டியைத்தொடர்ந்து தொட்டுக்கொண்டு ஓடிவந்தார்கள். அண்ணுமலைப் பண்டிதர் அவர்களையெல்லாம் வண்டியைப் பிடித்திழுக்கும் கைகளை எடுத்துவிடும்படி அதட்டி விரட்டியடித்தார். வழியில் தென்பட்ட வாலிபர்கள் அதிலும் குறும்பு மிகுந்தவர்கள், "பலே! பலே! லேடி! சபாஷ்!" என்று தங்கள் போக்கிரித் தனத்தோடு கூடிய பாரராட்டுரைகளை வெளிப்படுத்திஞர்கள். ஆனுல், அண்ணுமலைப் பண்டிதரின் முகத்தைப் பார்த்தவுடனே அந்தக் குறும்பர்களின் வாலாட்டமெல்லாம் எங்கே போய் ஓடி ஒளிந்தனவோ தெரியாது.

இப்படியாக வழிமுழுதும் கேலியும் கெக்கலிப்பும் ஏற்பட வண்டியோட்டிக் கொண்டு வந்த தங்கம் கடைசியாகக் கதலிப் பட்டணத்துக்குள்ளே வந்து சேர்ந்தாள். அங்கும் வீதிகளில் இது போன்ற நிகழ்ச்சியே நடைபெற்றது.

அண்ணுமலைப் பண்டிதர் வலம்—இடம் என்று கூறக் கூற அவள் அந்தந்த வீதிகளிலே வண்டியைத் திருப்பி ஓட்டிக் கடைசியாகக் கதலிப் பட்டணம் ஜமீந்தார்அவர்களுடைய மாளிகையின் முற்றவாசலிலே கொண்டுவந்து வண்டியை நிறுத்திஞள்,

வண்டி நின்றவுடனே, அண்ணுமலைப் பண்டிதர் கீழே இறங்கிஞர். அவர் கீழே இறங்குவதற்குமுன் ஒரு வேலைக்காரன் ஓடிவந்து மாட்டுக்கயிற்றைப் பிடித்துக்கொண்டு, "ஐயா! இறங்குங்கள்!" என்று கூறி நிமிர்ந்தவன், "ஆ!" என்று வியப்புக்குரல் எழுப்பிஞன். பிறகு அவன் மிகவும் தாழ்ந்த குரலில், "அம்மா! இறங்குங்க" என்று கூறிஞன். தங்கம் வண்டிலிருந்து இறங்குவதற்கு முன்னுலே, மாளிகையின் உட்புறத்திலிருந்து வெளிப்பட்ட ஒரு கிழவர், "பண்டிதரே! வந்துவிட்டீர்களா? ஆ! இந்தப் பொண்ணுதாஞ தங்கம்! தங்க விக்கிரகம்போலயிருக்காளே!" என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

அவருடைய மேனி மினுக்கும். குரலின் கப்பீரமும், நெடிய உருவமும் பார்க்கும்போதே அவர் உயர்குடிப் பிறந்த, செல்வமும் செல்வாக்குமாக வாழ்ந்த ஒரு மனிதர் என்பதைக் எடுத்துக் காட்டுவனவாக இருந்தன.

பஞ்சக் கச்சம் வைத்துக் கட்டிய துல்லியமான வெள்ளைநிறமுள்ள தங்கச் சரிகை வேட்டியும், தோளில், சலவை கலையாதபடி மடித்துப் போட்டிருந்த துண்டும், இடையில் தடியாகவும், கழுத்தில் சன்னமாகவும் அழகிய கோர்வை வேலைப்பாட்டுடன் கூடிய தங்கச்சங்கிலிகளும், அந்தக் கழுத்துச் சங்கிலியில், நட்டநடுவில் வைரமும் அதைச் சுற்றிலும் நவரத்தினங்களும் பதித்துச் செய்யப்பட்டிருந்த மயில் உருவமுடைய பதக்கமும், கையில் கட்டியிருந்த வைரத்தடையமும், கழுத்தில், குறுகிய வட்டமுள்ளதாகப் போட்டிருந்த தங்கப்பூண்களுடன் கூடிய உருத்திராக்க மாலையும், அவர்தம் பழுத்த மேனியிற் பூசியிருந்த சந்தனமும், நெற்றியில் தீட்டியிருந்த மூன்று வரிகளாலாகிய திருநீற்றுப்பட்டையும் கண்ட தங்கம். அவர்தான் கதலிப் பட்டணம் ஜமீந்தாராக இருக்க வேண்டும் என்று யூகித்துக்கொண்டாள்.

அண்ணுமலைப் பண்டிதரை முதன் முதல் பார்த்தபோது ஏற்பட்ட ஒரு பயபக்தியான மரியாதையுணர்ச்சி போலவே, அந்த ஜமீந்தாரைப் பார்த்த போதும் அவளுக்கு ஒரு பணிவுணர்ச்சி ஏற்பட்டது.

அவர் தங்கத்திடம் மிகவும் அன்பாக நடந்து கொண்டார். அண்ணுமலைப் பண்டிதர் தங்கத்திற்கு, "அம்மா இவர்தான் ஜமீந்தார் கருணுகரர்" என்று கதலிப்பட்டணம் ஜமீந்தாரை அறிமுகப்படுத்தி வைத்தார்.

உடனே தங்கம், தன் இருகையும் சேர்த்துக் கூப்பி ஜமீந்தாருக்கு வணக்கம் தெரிவித்தாள்.

'வா! அம்மா!" என்று கனிந்த குரலோடு வரவேற்ற கருணுகரர், 'உள்ளே உன் மாமி யிருக்கிருள், அங்கே போயிரு!' என்று சொல்லி அவளுக்குக் கதவுப் பக்கம் கைகாட்டிஞர், தங்கம். அந்தப் பக்கம் திரும்பிய அதே நேரத்தில் இரண்டு பணிப்பெண்கள் ஓடி வந்து, "அம்மா, பெரியம்மா உள்ளேயிருக்கிருர்கள் வாருங்கள்!" என்று மிகவும் பணிவாகக்கூறி அவளை அழைத்துச் சென்ருர்கள்.

தங்கத்திற்கு எல்லாம் புரியாத புதிராக இருந்தது. அண்ணுமலைப் பண்டிதர் கதலிப் பட்டணத்திற்கு அழைத்த போது, அவர் தம் வீட்டிற்குத் தான் அழைக்கிருர் என்று அவள் எதிர் பார்த்தாள். அண்ணுமலைப் பண்டிதருக்குத் தனியாக ஒரு வீடு இருக்கிறதென்று அவள் கேள்விப்பட்டிருந்தாள். அங்கு தனியாக இருக்கப் பிடிக்காமல் தான், தங்கள் வீட்டிலே அவர் தங்கி விட்டார் என்றும் அவள் அறிந்திருந்தாள். இப்போது ஏதோ நூல் எழுதவோ, ஆராய்ச்சி செய்த குறிப்புக்களைந் திரட்டவோ தான் அவர் தன்னைந் துணைக்கழைத்துக் கொண்டு லந்திருக்கிருர் என்று எண்ணிய தங்கம், ஜமீந்தார் வீட்டிற்கு அவர் தன்னை அழைத்துக் கொண்டு வந்த காரணம் புரியாமல் திகைத்தாள்.

திகைத்த நெஞ்சத்துடனிருக்கும் போதே, பணிப்பெண்கள் அவளை ஜமீந்தாரிணி அம்மாள் முன்னிலையில் கொண்டு வந்து விட்டார்கள்.

இரத்தினச் சமுக்காளம் ஒன்றின் மீது திண்டின் மீது சாய்ந்து ஓய்வாக இருந்த அந்த அம்மாள் தங்கத்தைக் கண்டவுடன் எழுந்து வந்து ஆர்வத்தோடு அவளைக் கட்டியணைத்து. "வந்தாயா என் தங்கம்!" என்று அன்பு குழைய வரவேற்று அவள் கன்னத்தைப் பிடித்திழுத்து ஒரு முத்தமும் இட்டாள். தங்கத்தைக் கண்டபோது சுருங்கியிருந்த அந்தப் 'பெரியம்மா'ளுடைய முகம் மலர்ந்து விரிந்தது. இலேசாகக் குழிந்திருந்த அந்தக் கண்களிலும் ஒளி பெருகியது.

ஜமீந்தார் கருணுகரரும், ஜமீந்தாரினி "பெரியம்மா"வும் வரவேற்ற பாணிப்பைக் கண்டபோது அவர்கள் தான் வருவதை முன்கூட்டியே எதிர்பார்த்துக் கொண்டிருந்ததுபோல் தங்கத்திற்குத் தோன்றியது. எல்லாம் அண்ணுமலைப் பண்டிதரின்ஏற்பாடாகத் தான் இருக்கவேண்டும் என்று எண்ணிஞள் அவள். ஆனுல், ஏன் தன்னை இங்கே கொண்டுவந்து சேர்த்தார் என்பது அவளுக்குப் புரியாமல் இருந்தது. அண்ணுமலைப் பண்டிதரின் காரியங்கள் எல்லாமே புரியாத புதிராகத்தான் தோன்றின. தங்கமோ அவரை மீறி நடக்கவோ, ஏனெதற்கு என்றுகேட்டுச் செய்யவோ சக்தியில்லாத வளாயிருந்தாள். போகப் போகப் புரிந்துகொள்வோமென்று பேசாமலிருந்தாள்.

ஜமீந்தாரிணியம்மாள் தங்கத்தை உட்காரச் சொன்னுள் தங்கம், ஒதுங்கிப்போய்த் தாழ்வாரத்தில் உட்கார்ந்தாள். உடனே அந்தப் பணிப்பெண்கள் கலகலவென்று சிரித்தார்கள். "தங்கம், இப்படி வா அம்மா!" என்று அந்தப் "பெரியம்மா" தன் அருகில் இரத்தினச் சமுக்காளத்தில் வந்து உட்காரச் சொல்லியழைத்தாள் தங்கம் பயத்துடன். நெருங்கிப்போய் அந்தச் சமுக்காளத்தின் ஓரத்தில் உட்கார்ந்தாள்.

அதன்பின் "பெரியம்மா" ஏற்கனவே பத்துப் பதினைந்து வருஷப் பழக்கம் உள்ளவள்போல், தங்கத்தின் குடும்பத்திரைப் பற்றியும் அவர்கள் நலங்களைப் பற்றியும் விசாரித்தாள். தங்கம், ஏதோ தனக்கு ஒவ்வாத ஓர் உலகத்தில் தெரியாத நிலையில் புரியாத வளாகப் புகுந்துவிட்டதுபோல் எண்ணிக்கொண்டிருந்தபடியால் அந்த அம்மாளோடு கலகலக்கப் பேசவில்லை. அந்த அம்மாள் கேட்ட கேட்ட கேள்விகளுக்குச் சட் சட்டென்று ஒன்றிரண்டு சொற்களிலேயே பதிலளித்துஅமைந்து விட்டாள்.

இவ்வாறு பேசிக்கொண்டே அவர்கள் இருக்கும்போது பகல் மணி பனிரெண்டடித்துவிட்டது. உடனே வேலைக்காரப்பெண்கள் அங்கு ஓடிவந்து, சாப்பிட அழைத்தார்கள்

சாப்பாட்டுக் கூடத்தில், 'பெரியம்மா'வும் தங்கமும் நுழைந்தபோது அங்கு ஏற்கனவே ஜமீந்தார் கருணாகரரும், அண்ணாமலைப் பண்டிதரும் சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் முன்னாலே மேசை மீது வெள்ளித்தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. மேசையின் மறுபக்கத்தில் இருந்த இரு நாற்காலிகளுக்கும் எதிரில் மற்றும் இரண்டு வெள்ளித்தட்டுகள் வைக்கப்பட்டிருந்தன. அவை, தனக்காகவும் ஜமீந்தாரிணி அம்மாளுக்காகவும் வைக்கப்பட்டிருக்கின்றன என்று தங்கம் தெரிந்துகொண்டாள்.

அண்ணாமலைப் பண்டிதர் தங்கள் வீட்டில் தரையில் போடப்படும் தடுக்கிலேயே தான் உட்கார்ந்து சாப்பிடுவதைக் கண்டிருக்கிறாள். தளிர் வாழையிலையில்தான் அவருக்கு அவர்கள் இதுவரை சாப்பாடு போட்டு வந்திருக்கிறார்கள். ஆனால், இப்போது மேசையின்மீது வெள்ளித்தட்டில் அவர் சாப்பிடப் போவதைக் கண்டு தங்கம், வியப்படைந்தாள். நிலைமைக்கும் இடத்திற்கும் தகுந்தாற்போல் அவர்தம் பழக்க வழக்கங்களை எவ்வளவு எளிதாக மாற்றிக்கொண்டு விடுகிறார் என்று எண்ணி ஆச்சரியப்பட்டாள் தங்கம். ஜமீந்தாரிணி அம்மாள் தன்னையும் அழைத்துக்கொண்டு போய், அவர்களுடன் உடனிருந்து உணவுகொள்ளத் தொடங்கியதும் தங்கத்தின் வியப்புணர்ச்சி மேலும் பெருகியது. அவர்கள் வீட்டில் எப்போதும் ஆடவர்கள் முதலில் உணவருந்திய பிறகுதான் பெண்கள் உணவுட்கொள்வது வழக்கம். ஆண்களும் பெண்களும் ஒன்றாக இருந்து உண்பதே கிடையாது. இங்கு எல்லாம் மாறுபாடாக நடக்கக் கண்டு அவள் வியப்படைந்தாள்- திகைப்புமுற்றாள்.

தங்கம் சரியாகச் சாப்பிடவேயில்லை. அவள் இதற்குமுன் இப்படிப்பட்ட இடங்களில் இருந்ததுமில்லை, இப்படிப்பட்ட பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டதுமில்லை, இப்படிப்பட்ட உயர்தரமான சாப்பாட்டைச் சாப்பிட்டதுமில்லை.

மேசையின் மீது ஒவ்வொருவருக்கும் எதிரில் ஒவ்வொரு வெள்ளித்தட்டு இருந்தது. அதில் பணிப்பெண்கள் சோறு போட்டார்கள். அந்த வெள்ளித் தட்டுகளைச் சுற்றி ஏழு ஏழு கிண்ணங்கள் இருந்தன. அவையும் வெள்ளியாலானவையே. அவற்றில் நான்கு கிண்ணங்களில் நான்கு விதமான காய்கறிகள் இருந்தன. ஒரு கிண்ணத்தில் ரசமும் மற்றொரு கிண்ணத்தில் பாயசமும் இருந்தன. ஏழாவது கிண்ணத்தில் பொரித்த அப்பளம் இருந்தது. இவை போதாவென்று சாப்பிட்டவுடனே எதிரில் வாழைப்பழங்களும், மாம்பழங்களும், பலாச்சுளைகளும் ஒவ்வொரு வெள்ளித்தட்டில் கொண்டு வந்து வைத்தார்கள். தங்கம் எல்லாவற்றையும் தொட்டுப் பார்த்துவிட்டு வைத்துவிட்டாள், கிழவர்கள் இருவரும் கிழவியும் தொண தொணவென்று பேசிக்கொண்டே சாப்பிட்டார்கள், தங்கம் அவர்கள் பேச்சில் கலந்துகொள்ளவில்லை. அந்தப் பேச்சுக்கள் அவளுக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் ஓடின.

சாப்பிட்டபின், ஜமீந்தாரிணி அம்மாள் தங்கத்தை அழைத்துக் கொண்டு ஒரு பெரிய கூடத்துக்குச் சென்றாள். அங்கே அவர்களுக்காக மெத்தை விரித்து வைக்கப்பட்டிருந்தது. "தங்கம் கொஞ்ச நேரம் உறங்கு!" என்றாள் அந்த அம்மாள்.

தங்கம், சாப்பிட்ட பிறகு உறங்கிப் பழக்கமில்லை- அவள் எனக்கு உறக்கமே வரவில்லை என்று சொல்லி விட்டாள். "அப்படியானால், இப்போது என்ன செய்யப் போகிறாய்?" என்று பெரியம்மா கேட்டாள்.

"போய்ப் பாத்திரங்களை விளக்கி வைத்து விட்டு வருகிறேனே!" என்றாள் தங்கம்.

"அதற்கெல்லாம் வேலைக்காரர்கள் இருக்கிறார்கள், நீ பேசாமல் சும்மா இரு!" என்றாள் பெரியம்மா.

"சும்மா எப்படி இருப்பது?" என்று கேட்டாள் தங்கம்.

உடனே ஜமீந்தாரிணி அம்மாளுக்கு ஓர்யோசனை தோன்றியது. "தங்கம், நீதான் இதற்கு முன் இங்கே வந்ததில்லையே! மாளிகையையும் தோட்டத்தையும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வாயேன்" என்றாள்.

தங்கத்திற்கும் அது சரியென்றுபடவே தலையை ஆட்டினாள். உடனே பெரியம்மா ஒரு பணிப்பெண்ணை அழைத்து மாளிகை முழுவதும் சுற்றிக் காட்டும்படி கூறினாள்.

அவ்வாறே தங்கமும் வேலைக்காரியும் கிளம்பினார்கள். தங்கம் அந்த மாளிகை முழுவதும் ஒவ்வோரிடமாகப் பார்த்துக் கொண்டே போனாள். அந்த மாளிகையைப் பார்க்கப் பார்க்க அவளுக்குத்தான் முற்றிலும் புதுமையான ஒருலகத்தில் இருப்பதுபோலவே தோன்றியது தரைமுழுவதும், கருப்பும் வெள்ளையுமான சதுர வடிமுள்ள பளிங்குக்கற்கள் பதித்து வழவழவென்று விளங்கியது. கரும் பளிங்குத் தூண்கள் ஒவ்வொன்றும் பிருமாண்டமாக இருந்தன. சுவர்கள் எல்லாம், வண்ணப் பளிங்குக்கற்களால் ஒளி பொருந்தித் திகழ்ந்தன. சுவர்களின் உச்சியில் வரிசையுறப் பல வண்ணங் குழைத்துத் தீட்டிய ஓவியப் படங்கள் இருந்தன. கூடங்களில் உச்சித்தளத்திலிருந்து குளோப்புகளும்ரசக் குண்டுகளும் தொங்கிக் கொண்டிருந்தன. அறைகளுக்கும் கூடங்களுக்கும் நுழைவாயிலில் இருந்த மரக்கதவுகள் மிகப் பருத்தனவாகவும் சிற்ப வேலைச் சிறப்பு மிக்கனவாகவும் இருந்தன. மாளிகையின் மேல் தளத்தில் பெரிய பெரிய கூடங்கள் இருந்தன. அவற்றின் தரைப்பகுதி மட்டும் மரத்தாலாகியிருந்தது. சுவர்கள் எல்லாம் பளிங்குமயமாகவே இருந்தன. தோட்டத்துக் காற்று சிலு சிலுவென்று அங்கே வீசிக் கொண்டிருந்தது.

பிறகு தங்கம் தோட்டத்திற்குப் போனாள். அங்கு வேப்ப மரங்களடர்ந்து நல்ல நிழல் கொடுத்துக் கொண்டிருந்தன. தோட்டத்தில் ஆங்காங்கே பலவிதமான பூஞ்செடிகளும், சீமைக் குரோட்டன்ஸ் செடிகளும் வரிசையுற வைக்கப்பட்டிருந்தன. சில குரோட்டன்ஸ் செடிகள் அடர்த்தியாக இருந்தன. அவை பலவிதமான உருவங்கள் பெறும்படியாகக் கத்திரித்து விடப்பட்டிருந்தன. ஆனால், இவ்வளவு பெரிய தோட்டத்தில் ஒரு மல்லிகைச் செடிகூட இல்லை. பின்னால் பெரியம்மாவைப் பார்க்கும்போது தங்கம் இந்தக் குறையைச் சொன்னாள். அதற்கு ஜமீந்தாரிணி அம்மாள் "உங்கள் வீட்டிலிருந்து ஒரு செடி கொண்டுவந்து வைத்துவிடு" என்று கூறினாள்.

இதற்கிடையில், தங்கம் தோட்டத்தில் உலவிக் கொண்டிருந்தபோது, அங்கே அண்ணாமலைப் பண்டிதர் வந்து சேர்ந்தார்.

"தங்கம், மாளிகை எப்படியிருக்கிறது?" என்று கேட்டார் பண்டிதர். "அரண்மனை மாதிரியிருக்கிறது! அழகாயிருக்கிறது!" என்றாள் தங்கம்

"இந்த மாளிகையே உன் சொந்த [illegible] ந்தால் எப்படியிருக் [illegible] கேட்டார் பண்டிதர்.

[illegible] பொருள் புரியாமல் திகை [illegible] ங்கம்.

—தொடரும்

இந்தித் திணிப்புக் கண்டன வாரம்

31-8-60 முதல் 6-9-60 வரை

31-8-60-ஆம் நாள் முதல் 6-9-60-ஆம் நாள் வரையுள்ள ஒரு வார காலத்தை, இந்தித் திணிப்புக் கண்டன வாரமாகக் கொண்டு, தென்னக மக்களின்மீது இந்தியை மறைமுகமாகவும் நேரடியாகவும் புகுத்தும் ஆட்சியாளர்களின் முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் எதிர்த்துக் கண்டனக்குரல் எழுப்புமாறு நாடெங்கணுமுள்ள கிளைக் கழகத் தோழர்களையும், ஆதரவாளர்களையும், பொதுமக்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

தென்னகத்திற்கு இந்தி மொழி தேவையில்லை என்ற கழகத்தின் கொள்கையை விளக்கிக் காட்டியும், ஆட்சியாளர்கள் தந்துள்ள உறுதி மொழிகளை நிறைவேற்றுமாறு வற்புறுத்தியும், அதற்கேற்பவும் தென்னக மக்களின் விருப்பத்திற்கிணங்கவும் அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைக்கும்படி கோரியும் தீர்மானங்களை நிறைவேற்றி ஆட்சியாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அமைதியான முறையில் ஊர்வலங்கள் நடத்தியும், பொதுக் கூட்டங்கள் கூட்டியும், கண்டன வாரத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

அறிவகம், சென்னை-13,
19—8 1960

இரா. நெடுஞ்செழியன்.
பொதுச்செயலாளர் தி. மு. க.

சு. ம. திருமண மசோதா

காங்கிரசுக் காரர்கள் தோற்கடித்தார்கள் !

ஆரியர் புரோகித முறை.

தமிழ்நாட்டில் பழங்காலத்தில் இயற்கையான காதல் திருமணங்களே நடைபெற்று வந்திருக்கின்றன. இந்தச் செய்தியைப் பழந்தமிழ் நூல்கள் வலியுறுத்துகின்றன ஆனால், இடையிலே, ஆரியர்கள் இந்தியத் துணைக்கண்டத்திலே வந்து நுழைந்த பிறகுதான் மெல்ல மெல்ல அவர்களுடைய நாகரிகம் நாட்டிலே பரவத் தொடங்கியது. பரவியது. என்று சொல்வதைக் காட்டிலும் பரப்பப்பட்டது என்று சொல்லுவது தான் பொருந்தும்.

மக்களிடையே ஆரியப் பழக்க வழக்கங்கள். பரப்பப்பட்ட காலத்திலேதான் புரோகிதத் திருமணங்கள் வழக்கத்திலே ஏற்றுக்கொள்ளப்பட்டன. புரோகிதத் திருமணங்கள் பெருவழக்காக வந்துவிட்ட காலத்திலேகூட, அவைதான் சட்டபூர்வமானவை என்ற கருத்து நிலவியது கிடையாது ஆரியர்களிலேயே, புரோகித முறையில்லாத பல திருமணங்கள் நடந்திருக்கின்றன. அவை அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டும் இருக்கின்றன.

கண்மூடித் தீர்ப்பு

ஆனால், நம்மைக் காங்கிரசார் சுதந்திரம் வாங்கி அரசாளத் தொடங்கிய பிறகுதான், புரோகிதத் திருமணங்களைத் தவிர வேறு வகையான திருமணங்கள் செல்லுபடியாகா என்ற சட்டம் உண்டாகியது. ஏதாவது குடும்பச்சிக்கல் ஏற்பட்டு வழக்கு மன்றத்துக்குப் போனால், புரோகித முறைப்படி செய்யப்படாத திருமணங்கள் செல்லுபடியாகாவென்று கண்ணை மூடிக்கொண்டு தீர்ப்புச் சொல்லும் நிலை இன்று இருக்கிறது.

கருத்துக்கும் பகுத்தறிவுக்கும் பொருத்தமில்லாத திருமணங்கள் தாம் சட்டப்படி செல்லுபடியாகும் என்றும், குருட்டுத்தனமாக நடத்தப்படுகின்ற மூடச் சடங்குகளுடன் கூடிய திருமணம்தான் சட்டம் ஏற்கக்கூடியது என்றும், இந்த நாட்டிலே அந்த வழியில் செல்வோர்தான் வாழமுடியுமென்றும் நிலைமை இருக்குமானால் சீர்திருத்த மனப்பான்மை படைத்தவர்களின் கதி என்ன ஆவது ?

உலகம் எவ்வளவோ தூரம் முன்னேறியிருக்கிறது. உலகத்திலேயுள்ள ஒவ்வொரு தேசத்தாரும் தீமை தரும் பழைய வழக்கங்களை உதறித் தள்ளிவிட்டு முன்னேற்றப் பாதையிலே நடை போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

உலகம் ஒப்பும் உரிமை.

ஆங்கில நாட்டிலே ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பினால் உடனடியாக மணம் புரிந்து தம்பதிகளாக வாழ இடம் கொடுக்கிறது அந்த நாட்டுச் சட்டம், இரஷ்ய நாட்டிலும் இதற்கு இடம் இருக்கிறது. அமெரிக்க நாட்டிலும் அன்புக்கும் காதலுக்கும் வழியிருக்கிறது, பிரான்சு தேசத்திலே அந்த நாள் முதலே இந்த உரிமையிருந்து வருகிறது. பக்கத்திலே இருக்கும் பர்மா மலேயா முதலிய தேசங்களிலேயும், ஜப்பானிலும் சீனாவிலும் கூட மக்கள் தங்கள் வாழ்க்கையைத் தாங்கள் விரும்பிய முறையிலே வகுத்துக்கொள்ள இடமிருக்கிறது.

தன்மானமாய் வாழ்வதற்கு இங்கே பாதுகாப்பில்லையா ?

சென்னை சட்டமன்றத்தில், சுயமரியாதைத் திருமணத்தைச் செல்லுபடியாக்க ஒரு மசோதா கொண்டுவரப் பட்டது தோழர் எஸ். எம். அண்ணாமலை தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்தார். ஆனால், காங்கிரசுக்காரர்கள் ஒரே கட்டுப்பாடாக இருந்து இந்த மசோதா சட்டமாக நிறைவேற ஒட்டாமல் தடுத்து விட்டனர். காங்கிரசுக்காரர்கள் ஆளும்வரை மக்கள் தன்மானமாக வாழவோ சீர்திருந்தி முன்னேறவோ இடமிருக்காது என்ற கருத்து இந்த நிகழ்ச்சியால் வலுப்படுகிறது.

ஆனால் இந்த இந்தியத் துணைக் கண்டம் ஒன்றிலே மட்டும்தான், புரோகிதத் திருமணம் மட்டும்தான் பொருந்திய திருமணம் என்ற கருத்து ஆட்சி புரிந்து வருகிறது.

கட்டாயத் தாலிக்கும் சட்டமே துணை

இன்று இருக்கின்ற சட்டப்படி, கள்ளத்தனமாக ஒரு நங்கையைக் கட்டாயப்படுத்திக் கூட்டிவந்து, அவள் விருப்பத்துக்கு மாறாகவே, ஒரு புரோகிதன் முன்னாலே வைத்துத் தீ வளர்த்துத் திருமணம் செய்துவிட்டால். அதைச் சட்டபூர்வமானதாக ஏற்றுக்கொள்ளவேண்டும். கோதையொருத்தியைக் கூட்டிக்கொண்டு ஓடி எங்காவது காட்டிலேயிருக்கின்ற காளிகோயிலில் வைத்து அவள் வாயைக் கட்டிவிட்டு வலுக்கட்டாயமாகத் தாலி கட்டிவிட்டாலும் அந்தத் திருமணம் செல்லுபடியாகும். ஆனால், நாடறிய, ஊரறிய, நல்லவர்கள் உறவினர்கள் வாழ்த்துரைக்க, அறிஞர் பெரியார் ஆகியவர்கள் முன்னிலையிலே, ஒத்த உள்ளமும் ஒத்த பருவமும் உடையவர்கள் செய்துகொள்ளுகிற திருமணம் செல்லுபடியாகாத திருமணமாக இருக்கிறது. இந்த அவல நிலை மாறவேண்டும் என்பதற்காகத்தான் தோழர் அண்ணாமலை, சுயமரியாதைத் திருமணததைச் செல்லுபடியாக்க ஒரு மசோதா கொண்டு வந்தார். ஆனால், காங்கிரசுக்காரர்கள் அவர்கள் கை ஓங்கியிருப்பதன் காரணமாக இந்த மசோதாவைத் தோற்கடித்துவிட்டார்கள்.

அவமான மந்திரம்.

சுற்றிச் சூழ்ந்திருக்கும் மக்களுக்குப் புரியாத வடமொழியில் புரோகிதன் மந்திரம் சொல்லித் திருமணம் நடத்துகிறான். இது செல்லுமாம். அந்த மந்திரத்தின பொருள் என்னவென்று பார்த்தால், மனிதத் தன்மையையே - பெண்களின் பெருமையையே கெடுப்பதாகவும், அவமானப்படுத்துவதாகவும் இருக்கிறது இப்படிப்பட்ட மோசமான மந்திரத்தைக் கூறுபவனும் புரிந்துகொள்ளாமல், கேட்டுக்கொண்டிருப்பவர்களும் புரிந்துகொள்ளாமல், சொல்லி நடத்தப்படுகிற திருமணம் செல்லுமாம். இந்தக் காலத்திற்கு ஒவ்வாததும், அறிவுக்குப் பொருத்தமில்லாததும், மனித நாகரிகத்திற்கே மாறுபட்டதுமான புரோகிதத் திருமணம் செல்லுமாம். அம்மி மிதித்து, அருந்ததி பார்த்து, அது ஏன் செய்கிறோம் என்று அறியாமல் அய்யன் காலடியில் வீழ்ந்து வணங்கித் தாலி கட்டிக்கொண்டால்தான் செல்லுமாம் இதெல்லாம், வேண்டாம், அறிவுக்கும் நாகரிகத்திற்கும், மனிதத் தன்மைக்கும் சுயமரியாதைக்கும் பொருத்தமாகத் திருமணம் செய்து வரலாம் என்றால் அது செல்லாதாம் இந்த நாட்டுக் காங்கிரசு ஆட்சியாளர்கள் இப்படி முடிவு செய்துவிட்டார்கள்.

அவனே வெறியன் !

புரோகிதத் திருமணம் வேண்டாமென்று சொல்லுகிற நாம் ஜாதித் துவேஷத்தை வளர்க்கிறவர்களாம். இப்படிச் சில மேதாவிகள் கூறுகிறார்கள். இந்த மாதிரியான குருட்டு விவாதங்களைக் கேட்கும் போதுதான் நமக்கு ஆத்திரம் வருகிறது.

எல்லாச் சாதியிலும் தன் சாதியே உயர்ந்ததென்று இன்றும் கருதிக்கொண்டிருக்கிற ஒருவன்- தான் உயர்ந்த சாதியைச் சேர்ந்தவனாகையால்தான் ஒரு தெய்வத்திற்கு நிகரானவன் என்று கருதிக்கொண்டிருக்கிற ஒருவன்-தான நடமாடும் மனித தெய்வமாக இருப்பதால் இந்த மக்களெல்லாம் தன் காலடியில் வீழ்ந்து பணிய வேண்டியவர்கள் என்று இறுமாந்து இருக்கின்ற ஒருவன்- இப்படிப்பட்டவன் தான் புரோகிதன். அவனுடைய சாதிச் செருக்கும் தன் சாதியுயர்ந்ததென்று எண்ணுகின்ற அகங்காரப் போக்கும் நாம் இடங் கொடுத்து வரும்வரை மறையாது. அது மறையாத வரையில் அவன் சாதி உயர்வு தாழ்வுக்கு வழி வகுத்துக்கொண்டேதான் இருப்பான். இந்தச் சாதி வெறிப் போக்கை மறைப்பதற்காகத்தான் நாம் சுயமரியாதைத் திருமணங்கள் நாட்டில் பெருவாரியாக நடைபெற வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்-நடத்திக்கொண்டு வருகிறோம்.

புது வழி எல்லோருக்கும் பொது வழி !

இன்று நாட்டிலே திராவிட இயக்கத்தவர்கள் மட்டும் சுயமரியாதைத் திருமணங்கள் நடத்தவில்லை, மற்ற எல்லோருமே இம்மாதிரியான திருமணங்கள் நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள். கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் நடத்தும் புரட்சித் திருமணமும், காங்கிரசுக்காரர்கள் நடத்தும் கதர்த் திருமணமும், சைவ சமயத்தினர் நடத்தும் தேவாரத் திருமணமும் எல்லாம் சுயமரியாதைத் திருமணத்தையொட்டிய திருமணங்களே! கட்சி மனப்பான்மையாலும், சமயப்பற்றினாலும் இப்படித் தத்தமக்கென வழிகளை வகுத்துக்கொண்டாலும் இவர்கள் எல்லோருமே பழைமையையும்-மூடப் பழக்க வழக்கங்களையும் வெறுக்கின்ற காரணத்தாலேதான் புதுமைத் திருமணம் காண முற்படுகிறார்கள் என்பது வெளிப் படையானதே! இப்போதுள்ள சட்டங்களின்படி இவர்கள் எல்லோரும் நடத்தி வந்த-நடத்தி வருகின்ற புதுமைத் திருமணங்கள் அனைத்தும் செல்லுபடியாகாதனவாகவே முடிகின்றன.

சமத்துவ சமுதாயம்

சுயமரியாதைத் திருமணங்களால் நாட்டிலே சாதீயப் பழக்க வழக்கங்கள் ஒழியும்-கலப்பு மணங்கள் பெருகி அதன் காரணமாக சாதி வேற்றுமையற்ற ஒரு சமத்துவ சமுதாயம் உருவாகும்! இத்தகைய நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காகவே, சுயமரியாதை இயக்கம் இந்தச் சீர்திருத்த திருமண முறையை மக்களிடையே கொண்டு வந்தது. இன்று நாட்டிலே பெரும்பாலான மக்களின் ஆதரவுடன் இந்த முறைத் திருமணங்கள் பெருவாரியாக நடந்து வருகின்றன புதுமை ஆர்வமும் சமத்துவ நோக்கமும் கொண்ட இந்தச் சீர்திருத்தச் செம்மல்களின் முன்னேறுந் தன்மையை ஆதரிக்க வேண்டியது ஆளுவோரின கடமை. இந்தச் சுயமரியாதை மண முறையைச் செல்லுபடியாக்கச் சட்டந் துணை செய்யுமானால், இவர்கள் எதிர்காலத்தைப்பற்றி நல்ல நம்பிக்கையுடனிருக்கமுடியும். ஆனால், காங்கிரசுக்காரர்களின் போக்கு புதுமையுள்ளம் படைத்தவர்களின் எதிர்காலத்தை இருட்டடிப்பதாக உள்ளது. விரைவில அவர்கள் இந்தத் தீய மனப்பான்மையைவிட்டொழித்துவிட்டார்களானால் நாடு உருப்படும், இல்லாவிட்டால் அவர்கள் ஆட்சி நிலைப்படுமா என்பதே சந்தேகமாகிவிடக்கூடும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

—வேத்தரசன்.

வெண்பாப் போட்டி-5.

★

ஈற்றடி

தேடிக் கொணர்ந்த திரு.

இறுதி நாள் 10-9-60.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

பதினைந்து ஆண்டுகள் —பாழ்—

சுதந்திரத்தைப் புகழ்ந்த பலர் கருப்புக்கொடி நாட்டுகிறார்கள்.

உரிமையை மதியாமல் பெருமை பேசுவோர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் திராவிட நாட்டு விடுதலையை தன்னுடைய இதயத்தின் அடித்தளத்திலே வளரும் இலட்சியப் பயிராக மதித்திருக்கின்ற காரணத்தால் ஆகஸ்டு விடுதலையைப் போன்ற போலிச் சுதந்திர தினத்தை நினைத்துப் பார்க்கவும் நமக்கு நேரமில்லை! பதினான்காவது முறையாக ஆட்சிப் பீடத்திலேயிருக்கும் காங்கிரசுக் கட்சியினர் விழா நடத்திக் காட்டியுள்ளார்கள். இந்திய விடுதலையைப் பெரிதாகப் போற்றிப் புகழ்ந்தவர்களில் பலர் இன்று கருப்புக்கொடி காட்டி தேசியத்தின் மாயை விளக்கம் தந்திருக்கிறார்கள்! பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே வந்த விடுதலை இந்தியத் துணைக் கண்டத்து மக்களை எல்லா வகையிலும் வளம் பெற்றவர்களாக வாழவிடவில்லை. உலகத்தின் முன்னே புகழுக்காகக் காத்து நின்றவர்கள் அதனைத் தேடித் தேடி அலைந்தவர்கள் இந்தியத் துணைக்கண்டத்துப் பெரிய ஆட்சி உரிமையினைப் பெற்றுக்கொண்டார்கள்:

அடக்கு முறையை நம்பி நாடாள முடியுமா?

பெற்றுக்கொண்ட ஆட்சியின் வாய்ப்பு வசதிகளையெல்லாம் தங்களுடைய கட்சி நலன்களுக்காகவே பயன்படுத்திக்கொண்டு அரசியல் பண்புகளைப் பலியிட்டுக்கொண்டார்கள்! இந்திய சர்க்காரின் கொள்கைகள் துணைக் கண்டத்து மக்களுக்குப் பெருமையைத் தேடித் தரவில்லை என்பதனைக் கொடியேற்று விழா நடாத்தி மகிழ்ந்தவர்கள் சொல்ல மறந்துவிட்டார்கள்! மக்களாட்சிப் பண்புகளை பரணக் குழியில் தள்ளி விட்டவர்களும் காங்கிரசு மந்திரிகளாக இருக்கிறார்கள்! காங்கிரசுக் கட்சியின் கருத்துக்கள் தாம் நாட்டை வாழ்விக்கும் நல்ல திட்டங்கள் என்ற முறையில் அவைகளையே சட்டங்கள் ஆக்கிக்கொள்ளும் ஆணவப் போக்கையும் இந்திய சர்க்கார் எனப்படும் வடவர் தம் ஆதிக்கக் கூடாரத்தில் நாம் பல முறைகளில் கண்டுவிட்டோம். அடக்குமுறைச் சட்டங்களையும், அவசரத் தடுப்புக் காவல் கொள்கைகளையும் நம்பிக்கொண்டு நாடாண்டு விடமுடியும் என்ற துணிவு தங்களை விட்டால் வேறு எவராலும் இந்தச் சாதனைகள் முடியாது என்று சொல்லும் அளவுக்கு மிருக பலம் வைத்துள்ளார்கள்!

கண்டித்தார்கள்! கணை தொடுத்தார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பதில் சொல்லுவதாக நினைத்துக்கொண்டு எதிர் முகாமிலேயிருக்கும் எண்ணற்றோர் டில்லி சர்க்காரின் பெருமைகளையே திரும்பத் திரும்பச் சொல்லிக் காட்டுவார்கள். எத்தனை தடவை அவர்களுடைய திமிரான நடவடிக்கைகள் துணைக் கண்டத்துப் பொதுமக்களின் சாதாரண உரிமைகளைக்கூட மறுத்தும் அடித்தும் உதைத்தும் ஒதுக்கப்பட்டுள்ளன என்ற உண்மையை இன்னும் அவர்கள் தெரிந்துகொள்ளவில்லை. ஏக இந்தியாவை-உலகத்துக்கெல்லாம் நீதி சொல்லும் போதகாசிரியன் நேருவின் ஆட்சியிலே உள்ள நாட்டினை பிரிக்க நினைப்பதும் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று சொல்வதும், அதற்காகக் கிளர்ச்சிகளை உருவாக்குவதும் அனுமதிக்கப்படாத அநீதி நிறைந்த காரியங்களாகவே கண்டிக்கப்பட்டன - கணை தொடுக்கப்பட்டன!

பதவியைக் கொடுத்து பேச்சை நிறுத்து!

கால ஓட்டத்தின் வேகத்தில் கருத்துக்களும் முடிவுகளும் முறைகளும்கூட மாற்றி அமைக்கத்தக்கன என்பதை காந்தியாரின் வழி நடந்து மந்திரி சபைக்குள்ளே புகுந்துவிட்டவர்கள் மறந்துவிட்டார்கள்! மாநிலப் பிரிவினைகள் நடைபெற்றன. விசாரணைக் குழுவினரை அமைத்தனர் அவர்கள் சொன்னதுதான் சர்க்காரின் கொள்கை என்றும் அறிவித்திருந்தனர். ஆனால் பண்டிதநேருவே அதனைப் பம்பாய் விவகாரத் துவக்கத்தில் மீறிக் காட்டினார். மாநிலப் புனரமைப்புக் குழு சரியாகச் செயல்படவில்லை, செயல்பட முடியவில்லை- அனுமதிக்கவில்லை என்ற குமுறலும் குற்றச் சாட்டுகளும் குழுவின் உறுப்பினர்களாக இருந்த பணிக்கர்-பதாசுகர்-குன்சுரு போன்றவர்களிடமே தோன்றின! தன்னுடைய எண்ணத்திற்கு எதிராகக் கருத்துக்களைச் சொன்ன உறுப்பினர்களையே பண்டித நேரு கண்டித்தார்! மக்கள் சபையில் டாக்டர் குன்சுருவுக்கும் நேருவுக்கும் நடைபெற்ற வாய்ச் சண்டை நிகழ்ச்சிகளை அரசியல் நினைவு கொண்டவர்கள் என்றும் மறந்துவிடமுடியாது! பதாசுகரை கவர்னராக்கினார்கள்- பணிக்கரைத் தூதராக்கினார்கள்-பேசுவதை நிறுத்தினார்கள்.

தாசர் சொல்கேட்டுத் தரங்கெட்ட நேரு.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மறுப்புரை கூறக் காரணமாக இருப்பது நேருவின் சர்க்கார் மட்டும் தான் என்றால் அதனுடைய எண்ண விழைவுகள் திராவிடத்தின் தேவைகளையும் திராவிடர் தம் உரிமைகளையும் மதித்திருக்க வேண்டும். ஆனால் மிதித்துத் துவைத்திருப்பதற்குத்தான் பல சான்றுகள் உள்ளன. தேவிகுளம், பீர்மேடு பகுதிகளைத் தமிழர்களுக்குத் தரவில்லை. தங்களுடைய தாசர்கள் சொல் கேட்டு 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க விடவில்லை, இங்கேயுள்ள தரங்கெட்டவர்களையும் திறங்கெட்டவர்களையும் நம்பிக்கொண்டு உயிரோட்டமுள்ள பல திட்டங்களை நிறைவேற்றத் தரவும் நேருவின் சர்க்காராலே முடியவில்லை. இங்கேயிருந்து அவரைக் காணச் சென்ற சர்க்கார் ஊழியர்களைக்கூட காண விரும்பவில்லை!

கனிவான மொழி பொழிய வில்லை.

ஆவடி-நாகபுரி-பெங்களூர்- என்று கூடிக் கலைந்த காங்கிரசுக் கட்சியின் மாநாடுகளையெல்லாம் மதித்த அளவுக்குப் பிரதமர் என்ற முறையிலே மற்ற மாநில மக்களின் மாநாட்டு முடிவுகளையெல்லாம் எண்ணிப் பார்க்கவும் விரும்பவில்லை! கிருட்டிணமேனனின் கண்ணீரைத் துடைக்க முயன்ற அளவுக்குக்கூட தென்னாட்டில் வேதனைக் கண்ணீரில் மிதந்த மக்களின் துயர் துடைக்க முன் வரவில்லை! இங்கே வந்த போதெல்லாம் தன்னுடைய ஆட்சியின் பெருமையைப் பேசிய அளவுக்கு இங்கே உரிமைகளை இழந்து பொறுமிக் கிடக்கும் தொகையினரின் துன்பக் கதை கேட்டு ஆறுதல் சொல்லவில்லை! தன்னுடைய ஆட்சியில் சிக்கியுள்ள தமிழகத்து மக்களும் புதியதோர் விடுதலையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்ட பிறகும் கூட காட்டுமிராண்டிகள் என்று கண்டித்தாரே தவிர கனிவான மொழி பொழியவில்லை!

முட்டாள் பட்டத்தின் முன்னோடி நேரு!

திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமே சொன்னால்கூட நேரு சர்க்கார் மறுத்துவிடலாம் மதிக்கக் கூடாதென்ற மட்ட ரக மனப்பான்மை இருக்கின்ற காரணத்தினால் இங்கேயுள்ள சில மந்திரிகளுக்கு இருப்பதுபோலவே! ஆனால் அரசியல் தலைவர்கள், மொழித் துறை வித்தகர்கள் எனப் பல்வேறுபட்ட தென்னவர் தம் இணைந்த குரலை அவர்கள் மாற்றுக் கட்சியினர் என்ற ஒரே காரணத்திற்காக நேரு சர்க்கார் தன்னுடைய மொழிக் கொள்கையை மாற்றிக்கொள்ள முன் வரவில்லை! அத்தனை பேர்களுக்கும் முட்டாள் பட்டம் கட்டிய முன்னோடியாக இருந்தார் நேரு! இவரைத்தான் இவருடைய ஆட்சியைத்தான் தென்னாட்டவர் ஏற்றுக்கொண்டு போற்றிப் புகழ வேண்டுமென்று அன்றிலிருந்து இன்று வரையிலும் சொல்லுகிறார்கள்! ஆட்சித் திறமையற்றவர்கள் என்ற குற்றஞ்சாட்டப்படுகின்ற நேரத்தில் கொதித்துக் கிளம்பிய அளவுக்கு நிர்வாகத் திறமையினை அவர்களாலே நேருவின் சர்க்காராலே எந்த நேரத்திலும் காட்டிக்கொள்ள முடியவில்லை!

அதிகாரிகள் தண்டனையடைந்தனர் அமைச்சர் தப்பினார்.

முந்திரா வழக்கில் நிதி அமைச்சரே மாட்டிக்கொண்டு விழித்த நேரத்தில் டி. டி. கே. புனிதமானவர் என்று புகழ்வதற்கு வேறு எவரும் முன் வராவிட்டாலும் பெருமான் நேரு வந்தார்! சர்க்கார் பணத்தைக் களவாடிப் பயன்படுத்திக்கொண்டார்கள்-பங்கேற்றவர்களில் ஒருவர் நேருவின் நிதியமைச்சர். இருந்தாலும் தண்டிக்கப்படாமல் தப்புவிக்கப்பட்டார்! மக்கள் தீர்ப்புக்கு மதியளிக்க மறந்துவிட்டவர்கள் மகான் டி. டி. கே. அவர்களைத் திரும்பவும் டில்லிக்குத் திட்டக் குழுவின் துணைத் தலைவராக அழைத்துக்கொள்ளத் துடித்தார்கள்! விரட்டப்பட்ட சந்தானம் என்ற அய்யங்காரையும் விரும்பி அழைத்தார்கள்! இதற்காக அனந்தசயனம் போன்ற அய்யங்கார்கள் அயராதுழைத்தார்கள்! ஊழல் சுழலில் சிக்கிய அதிகாரிகள் தண்டிக்கப்பட்டனர்!

வழுக்கி விழுந்த மந்திரிகள்!

திராவிட முன்னேற்றக் கழகம் டி. டி. கே. விவகாரத்தைக் கட்சியைப் பெருக்கும் பிரச்னையாகக் கருதவில்லை. மக்களாட்சியின் பெயரால் கொடிகட்டி ஆள்பவர்கள் அசோகனின் அடிச்சுவட்டிலே நடைபோடுவதாகவும் அதனை நாம் நம்பித் தீர வேண்டுமென்றும் விரும்பி எதிர்பார்ப்பவர்கள், டி. டி. கே. முந்திரா பணக்கையாடலில் தீர்ப்புக் கூறிய நீதிபதி விவியன் போசுவையும் அவர் தம் குழுவினரையும் அவதூறு மொழிகளாலே கண்டித்தனர். அங்கேயும் சிறந்த கதாநாயகனாக இருந்தவர் பண்டிதநேருதான்! விசாரணைக்குழு என்று ஒன்றினை அமைத்துவிட்டு, அந்தக் குழுவினர் சில மறைக்கப்பட்ட உண்மைகளைக் கண்டுபிடித்து மக்கள் மன்றத்திற்கு அழைத்து வரும்போது நேருவின் சர்க்கார் அவர்களைத் தாராளமாகக் கண்டித்திருக்கிறது. மிகச் சிறந்த சான்றாக நானாவதி வழக்கில் சர்க்கார் 10000 ரூபாய் முன்பணமாகக் கொடுத்ததை தலைமைக் கணக்காளர் கண்டு தன்னுடைய கடுமையான ஆட்சேபக் குறிப்பினைக் கொடுத்தார்! நேர்மையும் உயர்பண்பும் கொண்டவர்கள் ஒப்புக்கொண்டிருப்பார்கள். ஆனால் கிருட்டிணமேனன் போன்ற வழுக்கி விழுந்த மந்திரிகள் ஆடிட்டர் ஜெனரல் சந்தாவை குறைகூறிக் கண்டித்தார்கள்! நேர்மையைப் புதைகுழிக்கு அனுப்புவதில் நேருவும் துணைநின்றதுதான் வியப்புக்குரியதாகும்!

கட்டணமில்லாத வக்கீல்!

திராவிட முன்னேற்றக் கழகம் நேரு சர்க்காரைக் குறைகூறக் கூடாதென்று கூறுபவர்கள் இந்தச் செய்திகளுக்கெல்லாம் சரியான விளக்கம் தர முன் வருவதில்லை. இந்த சர்க்கார் பதினான்காம் ஆண்டுக்கு வந்த பின்பும்கூட மக்கள் நலன் காத்திடத் தவறிவிட்டது! தொழிலாளர் குறை தீர்க்க இவர்களால் இயலவில்லை. நாட்டின் எல்லைகளைப் பாதுகாக்கும் திறமையும் இல்லை! இந்த எல்லைகளைப் பறிகொடுத்து விட்டார்கள் - ஒன்பது படைவீரர்களைச் சீனர் கொன்றுவிட்ட போதுகூட சூயென்லாயிடமிருந்து நட்ட ஈடு கேட்க நேருவாலே முடியவில்லை - ஆனால் நேபாளப் பிரதமர் கொய்ராலா ஒரு பிணத்துக்கு விலையாக 50,000 ரூ பெற்றுக்கொண்டார்! கொய்ராலா சாதாரணப் பிரதமர். பண்டிதநேருவோ உலகத்துக்குக் கட்டணமில்லாத வக்கீல்! வெளிநாட்டிலேயிருக்கும் குருசேவைப் போன்ற யாராவது நேருவின் பெயரைக் கிண்டல் செய்வதற்காகக்கூட உச்சரித்துவிட்டால் இந்திய சர்க்காரே எல்லா அலுவலகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு அதனையே எண்ணியெண்ணிக் கூத்தாடத் துவங்கிவிடுகிறது! ஆனால் உள்நாட்டிலே அமைதி இல்லை.

பஞ்ச சீலமா? பஞ்சைகளின் சீலமா?

வெளிநாட்டிலே வதைபடும் துணைக் கண்டத்து மக்களுக்கு நல்ல வாழ்வில்லை; தரமுடியவில்லை நேருவின் ஆட்சியினாலே! முரட்டுக் குணத்தாலே மிரட்டிப் பேசுகின்ற நாவன்மை நிறைய உண்டு இங்கே ஆனால் பல்வேறு இனமக்களின் உரிமைகளைக் காத்திடுவதற்கு அது பயன்படுவதில்லை! பஞ்சாப்பும், அசாமும் மொழிப் போர்க்களங்களாக விளங்குகின்றன! ஆந்திராவும் கன்னடமும் குழப்பக் கூடாரங்களாகத் திகழ்கின்றன! இவையெல்லாம் பாரத சர்க்காரின் திறமைக்குக் கிடைத்துள்ள பட்டயங்கள்! பஞ்சசீலம் பஞ்சைகளின் சீலமாகிவிட்டது! தென்னகத்தின் விடுதலை முழக்கமான கழகத்தின் குரலைப் பதினைந்தாவது ஆண்டிலாவது கேட்டு ஆட்சி நடத்தட்டும்!

கூடலரசன்

நூல் நயம்

அச்சுக் கலை

ஆசிரியர் : மா. சு. சம்பந்தன் வெளியிட்டோர்; தமிழர் பதிப்பகம் சென்னை-1. விற்பனை உரிமை; பாரி நிலையம், 59-பிராட்வே, சென்னை-1. விலை ஆறு ரூபாய்.

அச்சுக் கலை வளர்ந்த வரலாற்றையும், அச்சுக் கலையின் துணைப் பொருள்களான மை, தாள் முதலிய பொருள்கள் தோன்றி வளர்ந்த வரலாற்றையும் ஆதிமுதல் தெளிவாக விளக்குகிறது இந்த நூல். ஆசிரியர் மா. சு. சம்பந்தம் அவர்கள், மிகவும் அருப்பாடுபட்டு, பல நூல்களைச் சேகரித்து ஆராய்ந்து தம்மால் முடிந்த வரையில் அச்சுக் கலைபற்றிய விவரங்கள் முழுவதையும் கொடுத்திருக்கிறார்.

அச்சுக் கலை வரலாறுமட்டுமல்லாமல் மொழி நூற் பொருள்களும்கூட இந்த நூலில் இடம் பெற்றிருக்கின்றன என்று கூறுமாறு தமிழ் எழுத்துக்களின் தோற்றம், மாற்றம்பற்றிய குறிப்புக்களையும் ஆசிரியர் தருகிறார்.

இந்த நூலின் மூலம், இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலில் அச்சு வடிவில் வெளி வந்தது, தமிழ் நூல் ஒன்றுதான் என்ற செய்தியை யறிகிறோம்-நமக்கு இது பெருமை தருவதாக இருக்கிறது. இன்னும் தமிழில் அச்சுக் கலை தோன்றிய காலத்திலிருந்து பதிப்பிக்கப்பட்ட பழைய நூல்களைப் பற்றிய குறிப்புக்களும், தமிழ் நாட்டில், அதிகமாகச் செலவாகியுள்ள நூல்களைப்பற்றிய குறிப்புக்களும், நூலின் கடைசியில் ஆசிரியர் சேர்த்துத் தந்திருக்கிறார். சிறந்த அச்சகங்களைப்பற்றிய குறிப்புக்களையும் சேர்த்துக் கொடுத்திருக்கிறார்.

அச்சுப் பொறிகள், அச்சுக் கோத்தல், அச்சு உருவாக்கல், புதிய முறையில் அச்சுக் கோக்கும் பொறிகள் படப்பதிப்பு முறைகள்பற்றிய விவரங்களெல்லாம் மிகவும், தெளிவாக விளக்கிச் சொல்லப்பட்டிருக்கின்றன இந்த நூலில், அச்சுக்கலை வளர்ச்சியைக் குறிக்கும் பல படங்களும் இதில் நல்ல வெள்ளைத் தாளில் சேர்க்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

எல்லாவற்றுக்கும் மேலாக ஆசிரியரின் தமிழ் நடை தெளிந்த நீரோட்டம் போன்றமைந்திருக்கின்றது. ஆசிரியர் தாம் கற்றறிந்தவற்றை அவ்வவ்வாறே வாசகருக்கும் கற்றுக் கொடுக்கும் திறமையுள்ளவர் என்பதை அவருடைய தமிழ் நடை புலப்படுத்துகின்றது.

அச்சுக் கலையின் வரலாறும் விவரங்களும் அடங்கிய நூல் என்ற முறையில் இதை நாம் மிகச் சிறந்த நூலென்றே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆயினும், அச்சுக்கலைத் தொழில் நுணுக்க நூலாக இது அமைந்திருக்குமானால், அச்சுத் தொழிலில் ஈடுபட்டிருப்போருக்கும், ஈடுபடப் போகும் இளைஞர்களுக்கும் மிகவும் பயன்தரக்கூடியதாக இருக்கும் என்பது நம் கருத்து.

இந்த நூலை இவ்வளவு வெற்றிகரமாக எழுதி முடித்து வெளியிட்டுச் சிறப்படைந்திருக்கும் ஆசிரியர் தமது அடுத்த முயற்சியாக, அச்சுக்கலை நுணுக்கங்கள்பற்றி ஒரு நூல் எழுதி வெளியிடுவாரானால், அவருக்கு இத்துறையில் உள்ள ஊக்கம் மேலும் பயன்தரத்தக்க வகையில் செலுத்தப்படுவதாகவும் இருக்கும்; அத்துடன் தாம் எடுத்துக்கொண்ட பணியை நிறைவுறச் செய்ததாகவும் இருக்கும்.

ஆசிரியரின் இந்த நூல் அவர் முயற்சியின் வெற்றியை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. மேற்கொண்டு அவர் செய்யும் முயற்சிகளும் வெற்றி பெறுவனவாக என வாழ்த்துகிறோம்.

இராசபுதல்வன் (நாடகம்)

ஆசிரியர் : அமரன் வெளியிட்டோர்; தென்றல் நூற்பதிப்புக் கழகம், சலகண்டபுரம், சேலம் மாவட்டம். கிடைக்குமிடம்: செங்கதிர் நூலகம். 589, T. H. ரோடு. சென்னை-5. விலை ரூ 1-50.

நாட்டையாளப் பிறந்த இளவரசன் ஒருவனும், காட்டில் கொள்ளையடித்து வாழ்பவன் ஒருவனும் உருவத்தில் ஒன்றுபோல் இருக்கின்றனர் என்ற அடிப்படையைக் கொண்டு, அந்த உருவ ஒற்றுமையால் ஏற்படும் குழப்பங்களை ஒட்டமாகக் கொண்டு புனையப்பட்ட இந்த நாடகக் கதை விறுவிறுப்பாகவே செல்கிறது. புத்தகத்தைக் கீழே வைக்கமுடியாமல் ஒரே மூச்சில் படித்து முடிக்கும்படி அவ்வளவு விறுவிறுப்பாகக் கதையும் காட்சி அமைப்பும் ஆக்கப்பட்டிருக்கின்றன. வசனங்கள் நல்ல முறையில் அமைந்திருக்கின்றன. கொள்ளைக்கூட்டத் தலைவன் மாறப்பன் கோமளா என்ற பெண்ணைப் பார்த்து, 'கோமளா, உலகம் விசித்திரமான ஒரு விசாரணை மண்டபம்! வாயடியும் கையடியும் உள்ளவர்களுக்குத்தான் இதில் நீதி கிடைக்கும்! ஏழையும் கோழையும் தான் குற்றவாளிகள்! பக்தன், பகல் வேஷக்காரன், எத்திப் பிழைக்கும் ஏமாற்றுக்காரன் இவர்கள் தான் இதன் பாதுகாவலர்கள்! என்னைப் போன்றோர் இதன் தலைவர்! உன்னைப்போன்றோர் துணைக்குக் கிடைத்துவிட்டால் சொர்க்கத்தைத் தேடி ஓடவேண்டியதேயில்லை!'' என்று கூறுவதுபோன்ற கருத்து நிறைந்த உரையாடல்கள் இடையிடையே காணப்படுகின்றன. ''கதிரவன் ஏன் கனல் கக்குகிறது? நிலவு ஏன் குளிர்ச்சி மழைபொழிகிறது?'' என்பதுபோன்ற பொருளற்ற சொற்றொடர்களும் ஒன்றிரண்டு இல்லாமல் இல்லை. வடமொழிக் கலப்பு அதிகம்! புத்தகத்தின் தலைப்பும் வடமொழிதான்! இந்த ஒன்றிரண்டு குறைகளைத் தவிர, மொத்தத்தில் இந்த நாடகம் படிப்பதற்கும் நடித்துப் பார்ப்பதற்கும் சுவையானதென்றே அறுதியிட்டுக் கூறலாம். ஆசிரியர் அமரனுக்கு இயற்கையாகவே நல்ல நடைவளம் அமைந்திருக்கிறது.

அரசியல் மூளிகள்

—நாலாம் பக்கத் தொடர்ச்சி—

கொண்ட வெறுப்பை, குடியாட்சி வரம்புகளுக்கு உட்பட்டுக் கறுப்புக் கொடி காட்டுவதன் மூலம் வெளிப்படுத்துவதை-தேசத் துரோகம் என்று பெயர் சூட்டி அறிக்கை விடும் தேசத் துரோகச் செயலை இப்போதுதான் காண்கிறோம். சுதந்திராக் கட்சிச் செயலாளர் மூலமாக!

இந்தச் செயலாளரின் அருமைத் தலைவரும், சர்வ ஞானமும், சர்வ வல்லமையுமுள்ள சக்கரவர்த்தி எனப்படும் ஆச்சாரியார் 'இந்தி எதிர்ப்பை' ஆதரிக்கிறேன். ஆனல், அதன் சார்பில் தோன்றிய கருங்கொடி வரவேற்பை ஆதரிக்கவில்லை என்கிறார்! அவருடைய செல்வாக்கில் இயங்கும் 'கல்கி' ஏடு, ஆட்சி மொழிபற்றிய கருத்துரையில் :—

ஆங்கிலமும், இந்தியும், டில்லி சர்க்காரின் ஆதிக்க மொழியாக இருக்க வேண்டும் என்கிற கொள்கை சரியல்ல! அது, குழப்பம் தருவதாகும்! ''ஆங்கிலமே என்றைக்கும் தனிப் பெரும் ஆதிக்க மொழியாக இருக்க வேண்டும்'' என்று முழங்கிக் கொண்டிருக்கிறது.

கல்கியின் மொழியாதிக்கம் பற்றிய கருத்துரை வரவேற்கத் தக்கதே.

ஆனல், இந்த அறிவுரை நடைமுறைக்கு வர கல்கியர்கள் என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள்!

அவர்களுடைய தனிப்பெருங்கட்சியான சுதந்திரா கட்சிச் செயலாளர் கல்கியின் இந்த அபிப்பிராயம் தேசத் துரோகத்தைத் தூண்டுவதாக உள்ளது என்று அறிக்கை விடுத்தால்?

அப்படிப்பட்ட அறிக்கை வராதென்று உறுதியாக எதிர்பார்க்கலாம்! இப்படித் தனித்தனியாகக் குட்டையைக் குழப்புவதுதான், தனி மனித சுதந்திரத்தின் தத்துவமோ?

ஆங்கிலம் தனிப்பெரும் ஆதிக்க மொழியாக இருக்கவேண்டும் என்று கல்கி முழங்கிக் கொண்டிருக்கும் அதே இந்த நேர்த்தில்தான், நமது வெறுப்புக்குரிய திரு இராசேந்திரப் பிரசாத் சென்னைக்கடற்கரைக் கூட்டத்தில்:—

''நாங்கள், உங்கள் (திராவிடர்) மீது எந்த மொழியையும் திணிக்கவில்லை. ஆனல், அதற்காக ஒரு அந்நிய மொழி(ஆங்கிலம்)யை எங்கள் மீது நீங்கள் திணிக்க வேண்டாம்,''

என்று, முழங்கி இருக்கிறார் இதில் எத்தனை விபரீதம் அடங்கியுள்ள தென்பதை அறிவுடையோர் ஆராயவேண்டுகிறோம்.

அதிலும், குறிப்பாக 'நீங்கள்-நாங்கள்' என்று மிக ஆத்திரவசமாக வெளியிட்ட உண்மைகள், திராவிட மக்களின் சிந்தனைக்குரியன. அதாவது அந்த நீங்கள்-நாங்கள்தான் திராவிடத்தின் எல்லைக்கோடு—விந்தியமலை, நருமதை ஆறு எல்லாம்!

இவர்கள் இப்படியிருக்க, கயிறு திரிக்கும் கயவர்கள் சிலர், தங்களுடைய முழு மூடத்தனம் எவ்வளவு அம்பலமாகி வருகிறதென்றுகூடக் கவனியாமல் பித்தலாட்டம் செய்கிறார்கள்.

கறுப்புக்கொடி வரவேற்பைப் பொறுத்தமட்டில் வெற்றி என்றுதான் தி. மு. க. வெற்றி விழா நடத்தியது. இந்தி எதிர்ப்புப்போர் வெல்லவுமில்லை: தோற்கவுமில்லை; தொடங்கவே இல்லை! உண்மை இப்படி இருக்க, இந்திஒழிந்து போனதாகக் கருதி தி. மு. க. வெற்றி விழா நடத்தியாக இடும்பர்கள் சிலர், கயிறு திரிப்பதுடன் ஏளனமும் செய்கிறார்கள்! என்னே மடமை!!

செத்தபாம்படிக்கும் தந்தியாதித்தன், இந்த முழுமுடத்தனத்திற்கு முதல்வராக இருக்கிறார். பெரியாரின் பெருந் தொண்டர்கள் சிலர், இந்த வகையில் அருந்தொண்டு புரிகிறார்கள்!

இந்தி ஒழிந்தது என்றோ, இந்தி எதிர்ப்புப் போர் வென்றது என்றோ, யார் சொன்னார்கள்? கூறுவார்களா இந்த அரசியல் மூளிகள்?

தி. மு. க. முதன்முதலில் இராசேந்திரருக்குக் கறுப்புக் கொடி காட்டத் தீர்மானித்தபோது தினத்தந்தி அதனை, எதிர்த்தது.

பின்பு, வடவர்களின் வேண்டுகோள் இந்தி பற்றிய உறுதிமொழி, இவற்றிற்கிணங்க கறுப்புக்கொடி நிகழ்ச்சியை தி. மு. க. கைவிட்டது.

தி. மு. க. கருப்புக்கொடியைக் கைவிட்ட உடனே, தந்தியாதித்தனுக்கு 'புதியஞானம்' தோன்றி. புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக் கொண்டது போல்—செத்த பாம்பை அடிக்கப் புறப்பட்டது போல், தந்தியாதித்தன் கறுப்புக்கொடி பிடிப்பார் என்று தினத்தந்தியில் விளம்பரம் வந்தது.

இப்படி முன்னுக்குப்பின் முரண்பட எழுதுவதும், செய்வதும், இந்த அரசியல் மூளிகளுக்கு விளங்கவில்லையா? இவர்கள் விளங்காதவர்களாக இருப்பதால், நாட்டுமக்களும் அப்படியே இருப்பார்கள் என்று எண்ணுகிறார்களா?

நாட்டு மக்கள், இவர்கள் எண்ணி இருக்கிறபடி அவ்வளவு மூடர்களாக இருக்கவில்லை; அதனை ஒவ்வொரு நிகழ்ச்சிகளும் அறிவுறுத்திக் கொண்டே இருக்கின்றன.

தி. மு. க, வுக்கு இத்தனை வளர்ச்சியா? இவ்வளவு மரியாதையா? என்கிற பொருமை இவர்களை மிகமிகத் தாழ்ந்தவர்களாக ஆக்கி விட்டிருக்கிறது. ★

முல்லை

ஆசிரியர்
கண்ணதாசன்
விலை 25 காசு

புது வடிவில்
புத்தக உருவில்

சிறக்க வருகிறது
செப்டம்பர் இதழ்.

முல்லை சென்னை-6.

இலக்கியச் சுவை

ருக்மணி இராமநாதன், பி.எஸ்சி.

3. புறவாழ்வு நெறி

மக்கள் வாழ்க்கை முறை இரண்டு பெரும் பிரிவுகளில் அடங்கும். அவை புறவாழ்வு-அகவாழ்வு ஆகும். அகவாழ்விலும் புறவாழ்விலும் சிறந்து விளங்குவது வாழ்வின்வெற்றியாகும். புறவாழ்வில் பெறும் வெற்றிதான் நீடுநிற்கும் புகழ் ஆகும். திருவள்ளுவரும் ''ஈதல் இசைபட வாழ்தல்'' தான் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கூறுகிருர். புறவாழ்வில் பெறும் புகழே பொதுநலத் தொண்டாகும்.

போராட்டம் - வெற்றி- விழா என்பவைதான் புறவாழ்வு என்பதல்ல;பிரிதொன்றும் உண்டு.பசித்து வந்தோருக்கு உணவிடுதலும், வறியோருக்கு வரையாது வழங்கலும் புறவாழ்வில் அடங்கும். பெற்ற மகனைப் பிறந்த தாய்நாட்டு விடுதலைக்காகப் போர்க்களம் அனுப்பிய தாய்மார்கள் தமிழகத்தில் பலர் உண்டு. தாயே! உன் அருமைச் செல்வன் எங்கே? என்று நரையுந் திரையும் உள்ள மூதாட்டியைக் கேட்க, ''என் புலியைப் பெற்றெடுத்த வயிறுதான் இங்கு உள்ளது, புலியைப் பார்ப்பதற்குப் போர்க்களத்திற்குப் போய்ச் சேர்'' என்று விடை தருகின்ருர். தொன்று தொட்டு வென்றுவரும் தமிழரினத்தில் போர் என்ருலே தமிழர் வீறு கொண்டு புறப்படுவர். புறப்படுகின்ற படையினை வாழ்த்தியனுப்புவர் பெற்றெடுத்தோர் அத்தகைய அன்னையாரையே முன்னர் கண்டோம். பாடல் இது:

சிற்றில் நற்றூண்
  பற்றி நின்மகன்
யாண்டுள னோவென
  வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு
  மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய
  கல்லளை போல
ஈன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ
  போர்க்களத் தானே''

(—புறம்-86)

அத்தகைய ஆற்றல் மிக்கவன் களம் புகுந்தான் என்ருல் புகழ் பெற்ருன் என்றே பொருள். வெற்றியா? அன்றித் தோல்வியா? என்பதல்ல புகழ். சென்ற முயற்சியில் சிறந்து பணியாற்றினுனு? என்பதே புகழிற்கு அடிப்படை தமிழ் வீரன் ஒருவன் போராற்றலை - பேராற்றலைப் புறநானூறு காட்டுகிறது.

அவனே காளை-அவன் ஊரிலோ விழா. மனைவியோ பிள்ளைபெறும் நிலை-அவளது நோவிற்கு உதவப் போதல் கடன். சோவென்று மழை. அவனே கட்டில் பின்னிக்கொண்டு இருக்கிருன். துணைவிக்கு உதவி செய்து விழாவிற்குச் செல்லவேண்டும்; மழையோ கொட்டுகிறது. அவன் தன் கட்டில் பிணிக்கும் வேலையை எவ்வாறு மிகவிரைவிற் செய்வானே அவ்வாறு தமிழ் மறவன் போர்க்களத்தே விரைந்து போரிடுவான் என்று சாத்தந்தையார் பாடுகின்ருர்.

போர் - போர்க்களம் - போர்வீரர் இவையோடு புறவாழ்வு முடிவதில்லை. இவை புகழ் வடுக்களைப் புறத்தே பெறுவதற்குரிய ஏணிகள் என்பதை மறுக்கவில்லை. புறவாழ்வில் பொது நலம் பேணும் மறவர் கூட்டம் போற்றற்குரியதேயாகும். என்ருலும் மற்ருெரு நெறியே இன்றைய தமிழகத்திற்குத் தேவை. அன்றைய நிலையிலும் தமிழகத்தில் இருந்ததும் ஆகும். வறியோருக்குப் பொருள் கொடுத்துப் பசித்தோருக்கு உணவு அளித்துப் புகழ் பெற்ரேரும் புறவாழ்வு நெறிப்படுவோரே.

போரும் போர்க்களமும் உணவிருந்தாற்ருன் உருப்பெறும்.''உண்டாலம்ம உலகம்'' என்று புறம் கூறுகிறது. இந்த உலகம் உண்மையில் மக்கள் வாழும் பகுதியாக இருக்கவேண்டுமாளுல் இப்படித்தான் இருக்கும் என்று புறநானூறு கூறுகிறது.

''கிடைப்பதற்கரிய சுவைமிக்க அமிழ்தமே ஆனுலும் தனக்கே என்றில்லாமல் பிறருடன் உண்பர். கண்டதற்கெல்லாம் மீசை துடிக்க வயிற்றைப் பிடித்துக்கொண்டு செந்தீப் பிழம்பாய்க் கண்விளங்க வெகுளார். செய்யத்தகாதது கண்டு செய்யாது பெருமை பெறுவர். புகழுக்காக மறவராய் உயிரும் கொடுப்பர். பழிவரின் பொருளைப் பொருட்டாகக் கருதிப் பெருர். தமக்கென முயலாதவராய்ப் பிறர்க்கே உதவி செய்யும் பெருந்தொண்டு செய்பவர்''-

இத்தகைய குணவியல்புகளைப் பெற்றிருந்தவரே புறநானூறு காட்டும் தமிழ் இனம். இன்று இதிற் காணப்பட்டவைகள் பல இல்லாவிட்டாலும் பரவாயில்லை; எதிர்மறையாகவும் சில உள்ளமையே தமிழ்க்குடி தாழ்ந்து போனதற்குக் காரணமாகும். அத்தகைய குறைபாடுகள் நீங்காது நீடித்து நிலை பெறுமாளுல் ஆண்டாண்டு தோறும் அடிமைகளாகவே அல்லற்படுவதைத் தவிர வேறு வழியில்லை. வறுமைப் படுகுழியில் வாடி வதங்கும் கோடிக்கணக்கான தமிழ்க்குடிகள் இங்கு இருக்கின்றனரே? ஏற்ற தகுதியும் பெற்ற கல்வியும் வழிகாட்டாது வழிக்கரையில் நிற்கும் தமிழ்மக்கள் பல்லோர் வருந்துகின்றனரே? எடுப்பார் கைப்பிள்ளையாக தொடுக்கும் கணைக்கெல்லாம் மறுக்கும் மனப்பான்மையுடையோர் சிலர் தலைமையில் இருப்பதாலன்ரே இந்த நிலை!

மழையைக் குறைகூறும் மக்கள் இன்றுண்டு. பருவந்தவறிப் பெய்யும் மழையைக் குறைகூறுவர். சங்க காலத்தில் மழையை மறந்துவிட்ட மக்களுக்குக் கபிலர் நினைவூட்டுமிடம் நினைந்து இன்புறத்தக்கது. வறியோர்-செல்வர் என்று பாகுபாடு இல்லாமல் ஒரு நிலையாகவே மழை பெய்து மகிழ்ச்சியைத் தருகின்றது. மழை பெய்யின் விளைவுமிகும்; விளைவு மிகின் மக்கள் வயிருர உண்டு மகிழ்வர். இத்தகைய மகிழ்ச்சியின் வித்தே 'மழை'யாகும். அத்தகைய மழையையும் மறந்த மக்கள் சங்க காலத்தில் இருந்தனராம். ஏன்? மழை பெய்யாமையால் மறந்தனரா? அன்றி மழையே தெரியாத மக்களா? அப்படியும் இல்லை! மழையும் பெய்தது; மக்களும் விளைவைப் பெற்று மகிழ்ந்தனர். அப்படியாளுல் நன்றி கொன்ற சமுதாயமா? என்ருல் அதுவும் இல்லை. பின் என்னவாய் இருக்கமுடியும்?

மழையையும் மறக்குமாறு ஒருவன் மக்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தானும். அவன் புகழையே பாடி மகிழ்ந்த மக்கள் மாரியை மறந்தனராம். மறந்துவிட்ட மக்களுக்கு மழையைத் தெரியுமா? பெரும் பயன் தருமே? என்று நினைவூட்டுகிருர் கபிலர். அத்தகைய பெருங்கொடை வள்ளல் பாரி என்பதை அறியும் போது, அப்படிப்பட்ட அருட்குணம் உடையோரும் ஆண்ட தமிழகம் தான் இன்று அரிசிகூடக் கிடைக்காமல் அவதிப்படுவது இழிவைத்தான் காட்டுகிறது.

மக்களறிந்த மகிழ்ச்சியைத் தந்த மழையையும் மறக்கச் செய்த மன்னன் வேள்பாரியைப் பாடும் கபிலர் பாடல் இதுதான்:

''பாரி பாரி
  யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர்
  செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண்
  டுலகுபுரப் பதுவே''

(புறம்-107)

இத்தகைய கொடையால் புறவாழ்வில் பாரி பெற்ற இந்த அரிய-அழிவற்ற இடத்தினைப் பின்வந்தோர் யாரும் பெற்றிலர். போரும்-வீரமும்-புகழும் பெறுவதற்கு மறவர் திருக்கூட்டம் எப்பொழுதும் அன்றும்-இன்றும் உண்டு. ஆனுல் கொடை வாழ்வில் பாரியைத்தான்-ஒரு வேள் பாரியைத்தான்-ஒரே தமிழ் மன்னனைத்தான் கண்டோம். அத்தகைய அருட்குணத்தை அறிந்து இன்புறுவது பெற முயற்சி செய்வது இன்றைய மக்கள் தலைவர்கள் கடமையாகும். மழையை மறக்கச் செய்யுமளவு பாரி அருட்குணம் உடையவனுக இருந்தான், பருவ மழை பெய்யும் காலத்திலேயே! இன்ரே மழையும் பருவத்தில் பெய்வதில்லை-மக்களையும் மக்களாய் வாழவிடுவதில்லை என்பது சிந்திக்கத் தக்கதேயாகும். சிந்தனையின் முதலும் முடிவும் புறநானூறு காட்டும், புறவாழ்வு நெறிச் செல்லின் புதுப் பாதை காட்டும் என்றே நம்புகின்றேன்.

அடுத்த கிழமை-

''அகத்துறை வாழ்வு''

தாயும் பேயும்

[நாகநாதன்]

தமிழெங்கள் தாயென்று போற்று!—இன்பத்
  தமிழைச் சிதைக்க வந்திடும் இந்தி
  கெட்ட—பேயென்று தூற்று!

தமிழெங்கள் வாழ்வென்று மதிப்பாய்!—இன்பத்
  தமிழைக் கெடுக்க வந்திடும் இந்தி
  வெறும்—தூளென்று மிதிப்பாய்!

தமிழெங்கள் அழகென்று கொள்ளு!—இன்பத்
  தமிழை யழிக்க வந்திடும் இந்தி
  பொல்லாக்—கழுகென்று தள்ளு!

தமிழெங்கள் உயிரென்று பாடு!—இன்பத்
  தமிழை யொழிக்க வந்திடும் இந்தி
  அற்ப—மயிரென்று போடு!

[தமிழெங்கள் தாயென்று போற்று.]

தமிழுக்குப் புதுநூற்கள் சேர்ப்பாய்!—இன்பத்
  தமிழுக்குப் பகைநூற்கள் ஏதேனும் கண்டால்
  நெருப்பிட்டுக் கொளுத்தியே தீர்ப்பாய்!

தமிழுக்குப் புகழ்சேர உழைப்பாய்!—இன்பத்
  தமிழுக்குப் பழிசேர்க்க முனைவாரைக் கண்டால்
  கைக்கூலிப் பிறப்பென்றே பழிப்பாய்!

தமிழுக்கு நலஞ்சேர்க்கத் துடிப்பாய்!—இன்பத்
  தமிழுக்குப் பிழைசெய்து வாழ்வாரைக் கண்டால்
  தகாதென் றேதுரத்தி அடிப்பாய்!

தமிழுக்குத் தொண்டென்றும் செய்வாய்!—இன்பத்
  தமிழுக்குக் கேட்டினை விளைத்திடும் பகைமேல்
  அனல்கக்கும் குண்டென்று பாய்வாய்!

[தமிழுக்குப் புதுநூற்கள் சேர்ப்பாய்.

வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண வாய்வு, இடுப்புப் பிடிப்பு, அஜீரணம், பசியின்மை, வயிற்றுவலி இவைகளை அறவே நீக்கக்கூடியது.

5-பலம் டின் ரு. 3-50.

சம்பு இண்டஸ்ட்ரீஸ், சேலம்-2.
இலங்கையில் கிடைக்கும் இடம்
ஆத்மஜோதி நிலயம், நாவலப்பிட்டி.

வெண்பாப் போட்டி

'காய்' என்று தொடங்கிக் 'கனி' என்று முடிக்க வேண்டும்.

காய்விளமுன் நேர்,மாமுன் காணும் நிரைவெள்ளை;
காய்முன் நிரைகலியாம்; ஈரசைச்சீர்—ஆய்வரின்
ஆசிரிய மாம்;கனிமுன் நேர்நிரை வஞ்சியிவை
காசில் தளைதேர்; கனி!

—க. கஸ்தூரி, சென்னை.

காயும் விளமுங் கனியொழிந்து மாச்சீரும்
வாயுந் தமிழ்ச்சுவையாம் வெண்பாவை—ஆயுங்கால்
பூவின்றிக் காய்த்துப் புலவன்சொல் லாற்பழுத்துக்
காவின்றிக் கண்ட கனி!

—நா. செகநாதன், பம்மல்.

காய்சினம் கொள்ளார் தமிழர் கனன்றெழுந்தால்
பாய்புலி ஆவார் பரிதவிப்பீர்—வாய்வலி
ஒன்றால் வடநாடும் தென்னாடும் ஒன்றென்றே
தின்றீரே எட்டிக் கனி!

—எம். எஸ் இராமசாமி, அருப்புக்கோட்டை.

காய்கவரார் கையில் கனியிருப்பச் சான்றோர்கள்
தாய்மொழியாம் வண்ணத் தமிழிருப்பத்—தூயவளே!
இன்னுக் கடுங்காயாம் இந்திதனை ஏலாரே
கன்னித் தமிழே கனி.

—கு. மதிமன்னன், போடி-மீனாட்சிபுரம்.

காய்பசி கொண்டும் கடிதாய் உழைப்போரை
ஏய்த்ததலே பாடாய் இலங்கிடும்—பேய்களே
இன்னே திருந்துவீர் இன்றேல் பொசுக்குமவர்
கண்ணலல்ல செந்தீக் கனி.

—மு. சினிவாசன், பெரியகுளம்.

காய்ப்பதெலாம் நல்ல கனியாமோ? சிப்பியிலே
வாய்ப்பதெலாம் நல்லொளி முத்தாமோ?—ஆய்வுடனே
கற்றறிந்த நம்அண்ணா காட்டும் கருத்தெல்லாம்
கற்கண்டுச் சாற்றில் கனி.

—புத்தூரான், க. புதுப்பட்டி.

காய்க்கும்! பழுக்கும்! கனிந்தவுடன் சாறுதரும்!
நோய்க்கும் மருந்தாம் நொடிப்பொழுதில்!—ஆய்ந்துரைப்பின்
மன்னும் எழில்மணந்து மாளா மகிழ்வுதரும்
கன்னிக்கு நேர்மாங் கனி.

—அ. செல்லப்பன், புதுவை.

காய்ந்தெழுந்த சேரனவன் கல்லேற்றி ஆரியரின்
வாய்க்கொழுப்பைத் தீய்த்த வகையறிந்து—பாய்பிரர்
வண்டமிழைக் காக்க வடவர்மேற் செல்வேனே
கண்ணெல்லாங் கொவ்வைக் கனி

—செல்வக்கிழான், சென்னை.

காய்கதிர்போல் தொண்டைவளங் காத்த அதியமன்னன்
தாய்த்தமிழ்தான் நாளுந் தழைத்திடவே—நோய்நீக்கும்
அங்கனியை ஔவைக் களித்த கொடைப் பெருமை
தங்கியதே நெல்லிக் கனி.

—தே. அறிவுடைநம்பி, சென்னை.

காய்ந்த சருகெனவே காட்சிதரும் மேனியினள்;
வாய்ந்த புலமை வனப்புடையாள்;—தோய்ந்த
அமிழ்தின்வெண் பாவிசைக்கும் அவ்வைக்(கு) அதியன்
தமிழ்வாழத் தந்தான் கனி.

—'குறள்', உப்பிலிபாளையம்.

காய்தல் விரும்பாக் கவிக்குயில், நற்றமிழ்த்
தாய்பெற்ற செல்விக்குத் தார்வேந்தன்—மெய்யன்பால்
ஆர்த்தெழும் வீரன் அதியன் பரிசளித்தான்
கார்நிறத்து நெல்லிக் கனி.

—இறையடிமை, அலங்கியம்.

காய்க்குமோ பட்டமரம்? கண்ணிலா மாந்தர்க்கு
வாய்க்குமோ நல்வாழ்வு? வஞ்சஇந்திப்—பேயை
நினைக்குமோ செந்தமிழ் இன்னுளம்? பெண்ணே!
இனிக்குமோ எட்டிக் கனி.

—ம. ரா. ஆ. சாமி, உத்தமபுரம்.

காய்கின்ற வெண்ணிலவில் காதலியின் கைப்பற்றிப்
பாய்கின்ற அன்பால் பகர்ந்திடுவேன்—சாய்ந்தாடும்
அன்னமே பேரழகே அன்புருவே உன்சிவந்த
கன்னம் எனக்குக் கனி!

—பரதூர் ராமு, கடலூர் புதுநகர்.

காய்கின்ற வெண்ணிலவில் காதற் கதைபேசி
வாய்இனிக்க முத்தம் பலவளித்தே—ஆய்மயிலென்(று)
அன்றணைத்தார் எங்கோ அகன்றதனுல் எக்கனியும்
கன்னியெனக் கெட்டிக் கனி.

—'இரட்டையர்', உடுமலை.

காய்ந்துவராச் செம்பழமோ! கால்வாய் வழிமருங்கில்
பாய்ச்சாத வெண்ணீர்ப் பளிங்கழகோ!—ஆய்மலரோ!
பொங்கு மலைத்தேனோ! போதைதரும் கள்தானோ!
கன்னியரின் செவ்வாய்க் கனி.

வி. பாலசண்முகம், சென்னை-7.

காய்நிலவின் வாட்டம் கவின்முகம்!எட் பூநாசி
பாய்புனலம் கண்கள்! பளிங்குடலாம்!—நாய்நாப்போல்
எட்டிவைக்கும் சேவடிகள் இன்ப நுதலிரண்டோ
கிட்டிவரும் கொவ்வைக் கனி.

—பானுமதி, மணப்பாறை.

காய்சினத்தான்; கொல்வேலான்; காசினியில் மாற்றாரைப்
பாய்வேங்கை ஒப்பப் படுத்தாலும்—ஆய்தொடி!
தாழ்வரைத் தோள்முயக்கால் தண்ணளியால் என்றலைவன்
காழிலாக் காதற் கனி!

—பா. பா. சோமநாதன் பி. ஏ., மயிலாப்பூர்.

காய்ந்த சருகானுள்; காலத்தின் கோலத்தால்
சேய்கள் பலபெற்றுச் சீரிழந்தாள்—வேய்குழலாய்!
வண்ண விழியும் வதனமும் கொண் டேயந்நாள்
கண்ணைப் பறித்த கனி.

—சிவ-சிற்பி, முகவை.

காய்த்துக் குலுங்குமெழிற் காபோல் அழகுநலம்
வாய்த்த வுனைக்கைம்மை வாட்டுவதோ—சேய்மொழியே!
நின்னை மணம்புரிவேன் நீதியிலார் நெஞ்சுடைப்பேன்
கண்ணேநீ என்கைக் கனி!

சா. நடராசன், சென்னை-12.

காய்நிலவில் கச்சகற்றி கட்டியணைத் தின்புறுங்கால்
வாய்முழுதும் தேங்கி வடிந்தொழுகும்—ஆய்தொடியின்
நாவில் சுரக்கின்ற நற்றேனுக் கீடாமோ
காவில் பழுத்த கனி.

—தி. இர. வெங்கடேசன், சென்னை-2.

காய்ந்த கருவாட்டைக் காசாக்கிக் கைவீசிப்
பாய்ந்து பயில்நடைப் பைம்மானாய்—மேய்ந்து வரும்
நண்டு நடுக்கமுறும் தண்டையொலிப் பெண்டரசைக்
கண்டுபெற்றேன் முத்தக் கனி.

—மு. சித்தி மகமூது, காரைக்கால்.

காய்வறுமைப் பட்டுக் கலங்குகிற மானிடரும்
சேய்வேண்டி ஆலயங்கள் செல்லுகையில்—நீயேனோ
அஞ்சுகிருய் நாளுமெனை அண்டாமல் வாட்டுகிருய்
கண்மணியே நெஞ்சங் கனி.

—காத்தமுத்து, உழுதி.

காய்தின்னக் கல்எறிந்தேன் காவலில்லா மாமரத்தில்
'ஓய்' என்றே ஓடிவந்தாள் ஓரிளம்பெண்—வாய்குழறி
நாணமுடன் நின்றிருந்த நங்கையவள் என்றனுக்குக்
காணக் கிடைத்த கனி

—பவானி-இராமலிங்கன், புதுவை.

காய்வான் எழுந்தான் கமலம் மலர்கின்ருள்
மேய்வான் பசுக்கூட்டம் மேடெல்லாம்—பாய்ந்தன;
போய்வா பணிக்கென்றே பொன்முத்தம் தந்தாளின்
வாய்நல்ல கொவ்வைக் கனி.

—சிவ. அருள், சென்னை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.